JULY 14, 2020
TUESDAY
VOL: 006/047
RS. 10.00
LATE CITY★

தேர்தல் சிறப்பிதழ் Rs.10

Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

# தமிழ் Mirror


## தனிமைப்படுத்தப்பட்டார் மாணவி:

# முடங்கியது அறிவியல் நகர்




*மு.தமிழ்ச்செல்வன்*

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி அறிவியல் நகர் வளாகம், தொழில் நுட்ப பீடத்தில் கல்வி பயிலும் மாணவியொருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்றியிருக்கலாமென்ற சந்தேகத்தை அடுத்து, அம்மாணவி, கிளிநொச்சியிலுள்ள பிறிதொரு இடத்தில் தனிமைப்படுத்தப்பட்டார்.

இதையடுத்து, அவ்வளாகத்தில் தொழில்நுட்ப, விவசாய, பொறியியற் பீடங்கள் அனைத்தும் முடக்கப்பட்டன. மாணவர்கள், விரிவுரையாளர்கள், நிர்வாகத்தினர் வளாகத்துக்கு உள்ளேயே முடக்கப்பட்டனர். இதனால், அறிவியல் நகர் வளாகம் நேற்று (13) மாலையிலிருந்து முற்றாக முடங்கிவிட்டது.

கம்பஹாவைச் சேர்ந்த மாணவியொருவரே இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டார். யாழ்ப்பாணம் வைத்தியசாலையிலிருந்து பிசிஆர் பரிசோதனை அறிக்கை, கிடைத்தவுடனேயே, அம்மாணவிக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளதா அல்லது இல்லையா என்பது தொடர்பில் உத்தியோகபூர்வமாக அறிவிக்கமுடியுமென, பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில் கடமைபுரியும் கம்பஹாவைச் சேர்ந்த இராணுவ சிப்பாய்க்குக் கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. அவருடைய சகோதரி, கிளிநொச்சி அறிவியல் வளாகத்திலுள்ள தொழில் நுட்ப பீடத்தில் கல்விப்பயிலுகின்றார்.

தொடர்ச்சி P2

# இராஜாங்கனைக்கு சுற்றுலாத் தடை

### வீடுதிரும்பிய இருவருக்கு மீண்டும் கொரோனா

அநுராதபுரம்- ராஜாங்கனை பிரதேசத்தில் கொரோனா தொற்றுக்கு உள்ளானவர்கள் கண்டறியப்பட்டதையடுத்து, அங்குள்ள சில பிரதேசங்களுக்கு வெளியார் செல்வதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

# ‘மீண்டும் ஊரடங்கு அமல்படுத்தப்படாது’



பொதுத் தேர்தல், பிரசார நடவடிக்கைகள் ஆகியவற்றை இலக்காகக் கொண்டு, சுகாதார வழிகாட்டல்கள், பாதுகாப்பு நடவடிக்கைகளை தளர்த்தவில்லையெனத் தெரிவித்த அமைச்சரவைப் பேச்சாளர், அமைச்சர் பந்துல குணவர்தன,

தொடர்ச்சி P2

## ஜனாஸாக்கள் எரிப்பு விவகாரம்:

# எதிரான மனுக்கள் மீதான விசாரணை ஒத்திவைப்பு

**“ உயர்நீதிமன்றத்தில் நேற்று (13) அழைக்கப்பட்ட அந்தமனுக்கள், செப்டெம்பர் 9ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது**

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணிக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை எரியூட்டுவதன் ஊடாக, தங்களுடைய அடிப்படை உரிமைகள் மீறப்படுகின்றனவெனத் தெரிவித்து, தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், மேலதிக

தொடர்ச்சி P2



## ஐக்கிய இலங்கைக்குள் அதியுச்சபட்ச

# ‘அதிகார பகிர்வு’

### சமஷ்டியைத் தமிழர்கள் விரும்பவில்லை என்கிறார் சஜித்

நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில் வெற்றிபெற்று, ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றியவுடன், பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள், அதியுச்சபட்ச அதிகாரப் பகிர்வைத் தமிழ் மக்களுக்கு வழங்கத் தயாராக இருப்பதாக, ஐக்கிய மக்கள் சக்தியில் தலைவரும் கொழும்பு மாவட்ட வேட்பாளருமான சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்;

# அக்கரைப்பற்றில் கைதான பொலிஸ் அதிகாரி தடுத்துவைப்பு

*கனகராசா சரவணன்*

சாய்ந்தமருது பிரதேசத்தில், 2019 ஏப்ரல் 19ஆம் திகதியன்று இடம்பெற்ற குண்டுவெடிப்பு சம்பவத்தின் சாட்சிகளை மறைத்தார் என்ற குற்றச்சாட்டின் கீழ், அக்கரைப்பற்றைச் சேர்ந்த பொலிஸ் பரிசோதகர் அபூபக்கர், நேற்றுக் காலை 8.30 மணியளவில் கைதுசெய்யப்பட்டாரென, பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## தனிமைப்படுத்தப்பட்டோர்

# ‘வாக்களிக்க தனி நேரம்’

மத்திய நிலையங்களில் தனிமைப்படுத்தப்பட்ட மற்றும் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்ட வாக்காளர்கள், ஓகஸ்ட் 5ஆம் திகதி வாக்களிப்பதற்காக, மாலை 4 மணிமுதல் 5 மணிவரை ஒருமணிநேரம் ஒதுக்கப்பட்டுள்ளதென, தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2




# உனவட்டுன உப-ரயில் நிலையத்துக்குப் பூட்டு

### தரித்துநிற்காது ரயில் ஓடும்

காலி-உனவட்டுன உப-ரயில் நிலைய அதிபர், கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவருடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்தமை கண்டறியப்பட்டதையடுத்து, அந்த ரயில் நிலையம் தற்காலிகமாக மூடப்பட்டது.

எனினும், அந்த ரயில்நிலைய அதிபரின் பிசிஆர் பரிசோதனை எதிர்மறையானது என்றாலும்

தொடர்ச்சி P2




# ‘1,000 ரூபாய்க்கு ரணிலும் மைத்திரியுமே பொறுப்பு’

### சஜித் தெரிவிப்பு: மனோ, திகா, ராஜித சண்டை பிடித்தோம் என்கிறார்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் நாள் கூலியை ஆயிரம் ரூபாயாக அதிகரிக்க விடாமல் செய்தமைக்கு முன்னாள் ஜனாதிபதி மைத்திரியும் அப்போதைய பிரதமர் ரணிலுமே பொறுப்புக் கூறவேண்டுமென, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டினார்.

ஊடகப் பிரதானிகளைக் கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று (13) காலை சந்தித்துக் கலந்துரையாடும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

“நீங்கள் அமைச்சராக இருந்தபோது, பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 50 ரூபாய் சம்பள அதிகரிப்பை அமைச்சரவையில் பெற்றுக்கொடுக்க முடிந்திருக்கவில்லை.

தொடர்ச்சி P2

## ஆணைக்குழுவின் நோட்டீஸ்க்கு எதிராக

# அநுர, ஷானி ரிட்-மனுக்கள்

கடந்த அரசாங்கத்தில் அரசியல் பழிவாங்கலுக்கு உள்ளாக்கப்பட்டவர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்கும் ஜனாதிபதி ஆணைக்குழுவின் நோட்டீஸுக்கு எதிராக, மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தனித்தனியாக இரண்டு ரிட்-மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.




தொடர்ச்சி P2

# ‘வெற்றிப் பட்டியலில் தயாசிறி இல்லை’

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் தயாசிறி ஜயசேகர, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் குருநாகல் மாவட்ட வெற்றிப்பட்டியலில் இல்லையெனத் தெரிவித்துள்ள அவ்வணியின் மற்றுமொரு வேட்பாளர் ஜோன்ஸ்டன் பெர்னான்டோ,

தொடர்ச்சி P2

# ‘எனக்கு கொரோனா இல்லை; நடமாட மக்களுக்கு அச்சம்’

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களை கண்டறிவதற்காக, போதுமான பரிசோதனைகளை அரசாங்கம் முன்னெடுக்கவில்லை எனக் குற்றஞ்சாட்டிய ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, “எனக்கு கொரோனா இல்லை. ஆனால், மக்கள் வெளியில் நடமாடுவதற்கு அச்சப்படும் சூழலை அரசாங்கம் தோற்றுவித்துவிட்டது” என்றார்.

தொடர்ச்சி P2




டேட்டா கட்டணங்கள் இன்றி Facebook மற்றும் WhatsApp உள்ளடங்களாக

Fun BLASTER



UNLIMITED Facebook மற்றும் WhatsApp

7 நாட்களுக்கு ரூ.47/- முற்கொடுப்பனவு பக்கேஜ்

மாதத்திற்கு ரூ.107/- முற்கொடுப்பனவு / பிற்கொடுப்பனவு பக்கேஜ்

வரிகள் உள்ளடங்களாக

ரீலோட் செய்வதன் மூலம், #678# டயல் செய்வதன் மூலம் அல்லது MyDialog App மூலம் செயற்படுத்திக்கொள்ளுங்கள்

4G SIM அட்டை மற்றும் 4G Smartphone அவசியமாகும்

நிபந்தனைகளுக்கு உட்பட்டது

TRC/D/PRO/20/5

Dialog எதிர்காலம் இன்றே.

PAGE 1 தொடர்ச்சிகள்

# முடங்கியது அறிவியல் நகர்

மாணவிக்கு தொற்று ஏற்பட்டிருக்கலாம் என்ற அச்சத்தில், அம்மாணவி தனிமைப்படுத்தப்பட்டார். அத்துடன், வளாகத்தினுள் இருந்து வெளியேறுவதற்கும், வளாகத்துக்குள் நுழைவதற்கும் நேற்று (13) முதல் தடைவிதிக்கப்பட்டது.

சகோதரனுக்குக் கொரோனா தொற்றியுள்ளமை கண்டறியப்பட்டதை அடுத்து, அவருடைய சகோதரி கம்பஹாவில் இருந்து மதவாச்சி வரை ரயிலில், ஜூலை 8ஆம் திகதி வந்திறங்கியுள்ளார் என்பது கண்டறியப்பட்டுள்ளது. அவர் அங்கிருந்து, பொதுப் போக்குவரத்தில் கிளிநொச்சிக்கு வந்துள்ளார் என, விசாரணைகளிலிருந்து கண்டறியப்பட்டுள்ளது.

## எதிரான மனுக்கள்...

ஆராய்வுக்காக, ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

உயர்நீதிமன்றத்தில் நேற்று (13) அழைக்கப்பட்ட அந்த மனுக்கள், செப்டெம்பர் 9ஆம் திகதி வரைக்கும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களின் சடலங்களை எரியூட்டவேண்டுமென்ற ஒழுங்குவிதிகளை உள்ளடக்கி, வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறும் அந்த மனுக்களின் ஊடாக கோரப்பட்டது.

முஸ்லிம் அரசியல் கட்சிகளின் தலைவர்களான ரவூப் ஹக்கீம், ரிஷாட் பதியூதீன், ஆகியோரின் சார்பிலும் முன்னாள் முஸ்லிம் எம்.பிக்கள் சிலர், இஸ்லாம், கத்தோலிக்கர்களால் 12 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

**“ மனுக்களில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ, சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்**

இந்த மனுக்கள், உயர்நீதிமன்ற நீதியரசர்களான பிரியந்த ஜயவர்தன, யசந்த கோதாகொட ஆகியோரின் முன்னிலையில் அழைக்கப்பட்டு, நேற்றும் ஆராயப்பட்டது.

மனுக்களில், சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னி ஆராச்சி, சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்ஹ, சுகாதார அமைச்சின் செயலாளர், சட்டமா அதிபர் ஆகியோர் பிரவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி மரணமடைவோரின், சடலங்கள் தொடர்பில் முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகளை குறிப்பிட்டு, ஏப்ரல் 11ஆம் திகதியன்று வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தலை இரத்துச் செய்யுமாறே, மனுக்களில் கோரப்பட்டுள்ளது.

சடலங்கள் எரியூட்டப்படவேண்டும் என்ற ஒழுங்குவிதிகளை அரசாங்கம் பிறப்பித்ததன் ஊடாக, அரசமைப்பு மீறப்பட்டுள்ளதாக மனுக்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# ‘அதிகார பகிர்வு’

ஊடகப் பிரதானிகளைக் கோல்பேஸ் ஹோட்டலில் நேற்று (13) காலை சந்தித்துக் கலந்துரையாடும்போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார். அதிகாரப் பகிர்வு தொடர்பாகக் கேட்கப்பட்ட கேள்விக்கு சஜித் பிரேமதாஸ மேலும் பதிலளிக்கையில்,

“பிரிக்கப்படாத ஐக்கிய இலங்கைக்குள், அனைத்து மக்களும் திருப்திப்படும் அதியுச்சபட்சத் தீர்வை வழங்குவதற்கு நான் தயாராக இருக்கின்றேன். அரசியல் தீர்வென்பது பிரித்துக் கொடுப்பதாக அமையாது. ஒருமித்த நாட்டுக்குள்தான் அரசியல் தீர்வை வழங்கமுடியும்” என்றார்.

“தமிழ்த் தேசிய கூட்டமைப்பு, இன்னமும் சமஷ்டி தீர்வு பற்றித்தானே பேசுகின்றார்கள். அதை ஏற்றுக்கொள்வீர்களா?” என்ற கேள்விக்கு,

“நான் வடக்குக்கு விஜயம் செய்தபோது அனைத்துத் தொகுதிகளுக்கும் நேரடியாகச் சென்று, அங்குள்ள மக்களுடன் கலந்துரையாடினேன். அம்மக்கள் எவரும் சமஷ்டி பற்றிப் பேசவில்லை. ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்றே கூறுகின்றார்கள். ஆகையால், மக்களின் ஆசைப்படி அரசியல் தீர்வைப் பெற்றுக்கொடுக்கவே நாங்கள் தயாராக இருக்கின்றோம்” என்றார் சஜித் பிரேமதாஸ.

“அப்படியென்றால் தமிழ்த் தேசிய கூட்டமைப்பைத் தமிழ் மக்கள் விரும்பவில்லை என்றா அர்த்தப்படுத்துகின்றீர்கள்” எனக் கேட்கப்பட்டபோது, “நான் அப்படிச் சொல்லவில்லை. மக்கள் சமஷ்டிக் கோரிக்கையை விரும்பவில்லை என்றே கூறினேன். கூட்டமைப்புப் பற்றிக் கருத்துக் கூறுவது இப்போது பொருத்தமானதல்ல, தேர்தல் முடிவுகள் வெளிவந்ததும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும்” எனப் பதிலளித்தார் சஜித்.

### தொல்பொருள் திணைக்களம்

“தொல்பொருள் திணைக்களத்தின் செயற்பாடுகள், அந்தந்தப் பிரதேசங்களில் உள்ள களநிலைவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அந்தந்தப் பிரதேசங்களின் துறைசார் நிபுணர்களின் உதவிகளுடன் ஆராயப்படுவதாக அமைய வேண்டும். அதைவிடுத்து, இனரீதியான ஒதுக்கீடுகளோடு, ஜனாதிபதி செயற்குழுக்களை நிறுவுவது, அநாவசிய பிரச்சினைகளையே உருவாக்கும்” என, சஜித் பிரேமதாஸ விசனம் தெரிவித்தார். சஜித்தின் அமைச்சுக்குக் கீழ் தொல்பொருள் திணைக்களம் இருந்தபோது, அதன் நிர்வாக சபையில் சிறுபான்மையினர் இடம்பெறாமையைச் சுட்டிக்காட்டி, தற்போதும் அதே செயற்பாடுகளை ஜனாதிபதி செயற்குழுவூடாக முன்னெடுப்பதாக ஊடகவியலாளர்கள் கூறியபோதே இவ்வாறு அவர் தெரிவித்தார்.



### ஓய்வெடுப்பதற்கு நாங்கள் தயாரில்லை

“கொரோனா வைரஸ் பரவலை உரியமுறையில் கட்டுப்படுத்தத் தவறியிருக்கும் தற்போதைய அரசாங்கத்தின் தலைமைகள், 3 நாள்கள் தேர்தல் பரப்புரைகளை ஒத்திவைத்துவிட்டு ஓய்வெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். நாங்கள் ஓய்வெடுக்கப்போவதில்லை. தொடர்ந்து மக்களிடம் செல்வோம்” என்று கூறிய சஜித் பிரேமதாஸ,

“கொரோனாவை சாட்டாக வைத்து ஓய்வெடுப்பதிலும் பார்க்க, தேர்தலைப் பிற்போட வேண்டும். அதைவிடுத்து, அவர்களால் தொடர்ந்து ஓடமுடியாமைக்காக 3 நாள்கள் ஓய்வறிவித்துள்ளமை வேடிக்கையானது. உண்மையாக மக்கள் மீது அக்கறையிருந்தால் தேர்தலை ஒத்தி வைக்கட்டும். அதுவரை நாங்கள் ஓய்வின்றி ஓடிக்கொண்டிருப்போம். அப்படிக் களைப்பின்றி ஓடும் சக்தி எங்களுக்கிருக்கிறது” எனவும் சஜித் கூறினார்.

## ராஜாங்கனைக்கு...

அப்பிரதேச மக்களின் பாதுகாப்பை கருத்தில்கொண்டே மேற்படி தீர்மானம் எட்டப்பட்டுள்ளதெனத் தெரிவித்த அவர், ராஜாங்கனை யாய, 1,3 மற்றும் 5 ஆகிய பிரதேசங்களுக்குச் செல்வதற்கோ தடைவிதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவித்த அவர், அங்கிருந்து வெளியேறுவதற்கும் முடியாது என்றார்.

இந்நிலையில், கந்தகாடு மத்திய நிலையத்தில் தனிமைப்படுத்தலை நிறைவு செய்து, வீடு திரும்பிய இராணுவ வீரர்கள் இருவருக்கும் மீண்டும் கொரோனா தொற்றியுள்ளமை உறுதிப்படுத்தப்பட்டுள்ளது எனத் தெரிவித்த, அக்குரஸ்ஸ சுகாதார பரிசோதகர் பீ.ஏ.பிரேமரத்ன, அவர்கள் இருவரும் கந்தகாடு மத்திய நிலையத்துக்கே திருப்பியனுப்பி வைக்கப்பட்டுள்ளனர் என்றார்.

புதிய தொற்றாளர்கள் இனங்காணப்பட்டமையை அடுத்து, அந்தந்த பிரதேசங்களைச் சேர்ந்த பலரும் சுய தனிமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். இன்னும் சிலர், தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அந்த வகையில், அக்குரஸ்ஸ, கல்லல, ஆகிய பிரதேசங்களில் 2 குடும்பங்களைச் சேர்ந்த 8 பேர், பியகம தனிமைப்படுத்தல் நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

“அவ்விரு இராணுவ வீரர்களும் சென்று திரும்பிய வர்த்தக நிலையங்களின் பணியாளர்கள், நெருங்கிப் பழகியோர், பிரத்தியேக வகுப்புகளுக்குச் சென்றவர்கள், விவசாய கூட்டத்தில் கலந்துகொண்டவர்கள் என பலர் சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்” என்றார். இந்நிலையில், கந்தகாடு புனர்வாழ்வு மத்திய நிலையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள கைதியொருவரைப் பார்ப்பதற்காக, மினுவாங்கொடையிலிருந்து சென்ற 10 பேர், தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர் என மினுவாங்கொடை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகம் தெரிவித்தது. வெகொவ்வ, கோப்பிவத்த, அஸ்கிரிய மற்றும் யாகொடமுல்ல ஆகிய பிரதேசங்களில் 6 குடும்பங்களைச் சேர்ந்த 10 பேரே, இவ்வாறு தனிமைப் படுத்தப்பட்டனரென, அவ்வலுவலகம் மேலும் தெரிவித்தது.

## அக்கரைப்பற்றில் கைதா...

அம்பாறை- அக்கரைப்பற்று இல்லத்தில் வைத்து, கொழும்பு குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைதுசெய்யப்பட்ட அவர், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் தற்காலிக ஏற்பாடுகளின் கீழ், தடுத்துவைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார் என தலைமையகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயித்த ஞாயிறுத் தாக்குதல்கள் தொடர்பிலான விசாரணைகளை முன்னெடுக்கும் கொழும்பு குற்றத்தடுப்பு பிரிவினர் விசாரணையின் அடிப்படையின் கீழே சந்தேகத்தின் பேரில் இவர், கைதுசெய்யப்பட்டார்.

களுவாஞ்சிக்குடி பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றிவந்த அவர், அம்பாறை பொலிஸ் தலைமையக வாகன கராச் பொறுப்பதிகாரியாகக் கடமையாற்றி வருகின்றார்.

இதேவேளை, சாய்ந்தமருதில் இடம்பெற்ற தற்கொலை குண்டுத்தாக்குதலில் உயிரிழந்ததாகத் தெரிவிக்கப்படும் மட்டக்களப்பு- மாங்காடு, களுவாஞ்சிக்குடி பிரதேசத்தைச் சேர்ந்த ஸாரா என்றழைக்கப்படும் புலத்தினியின், சிறிய தந்தை, நேற்றுமுன்தினம் (12) கைது செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## ‘எனக்கு கொரோனா...

“தானும் தனது மனைவியும் பிசிஆர் பரிசோதனைகளை செய்துகொண்டோம். அதில், தங்கள் இருவருக்குமே கொரோனா வைரஸ் தொற்றியிருக்கவில்லை என்பது உறுதியாகிவிட்டது” என்றார்.

கேகாலையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். “கொரோனா வைரஸ் ஆரம்பித்த காலத்தில், ஐக்கிய தேசிய கட்சி முன்வைத்த கோரிக்கைகளை ஏற்றுக்கொண்டிருந்தால், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன நெருக்கடிக்குள் இன்று சிக்கியிருக்காது” என்றார்.

“பரிசோதனைகள் குறைந்தளவில் மேற்கொண்டமையால், அதன் விபரீதம் மீண்டும் தலைதூக்கியிருக்கிறது” எனத் தெரிவித்த அவர், கொரோனா மேலும் உக்கிரமடையுமென உலக சுகாதார ஸ்தாபனம் முன்பே அறிவுறுத்தியிருந்தது. அதேபோல, இலங்கையில் கொரோனாவின் இரண்டாவது அலை ஆரம்பித்துவிட்டது என்றார். இரண்டாவது அலைக்கு முன்னரே, பரிசோதனைகளுக்குத் தேவையான இயந்திரங்களைக் கொள்வனவு செய்திருக்க முடியுமென தெரிவித்த ரணில் விக்கிரமசிங்க, “அதற்கான ஆலோசனைகளை நான் வழங்கிபோது, அரச தரப்புடன் டீல் செய்வதாக என்மீது குற்றஞ்சாட்டினர்” என்றார்.

இலங்கைக்கு, சர்வதேச நாணய நிதியம் வழங்கிய காப்புறுதி நிதியில், பிசிஆர் பரிசோதனை இயந்திரங்களை, கொரோனாவின் ஆரம்பகாலத்தில், அரசாங்கம் ஏன் கொள்வனவு செய்யவில்லையென வினவிய அவர், அந்த நிதிக்கு நடந்தது என்ன?

## ‘மீண்டும் ஊரடங்கு...

மக்கள் அச்சம் கொள்ளத்தேவையில்லை. பொருள்களை கொள்வனவு செய்வதற்கு முண்டியடிக்கத் தேவையில்லை. ஏனெனில், ஊரடங்குச் சட்டம் மீண்டும் அமல்படுத்தப்படாது என்றார்.

கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில், மக்களிடத்தில் அச்சமான நிலைமையொன்று ஏற்பட்டுள்ளது. பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில், ஊரடங்கு சட்டமும் அமல்படுத்தப்படுமென பரவலாக தகவல்கள் கசிந்துள்ளன. இது தொடர்பில் கேட்டபோதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்கள் புதிதாக அடையாளம் காணப்படுகின்றமையால் மக்கள் அச்சம் கொள்ளத் தேவையில்லை எனத் கேட்டுக்கொண்ட அவர், ஆனால், சுகாதாரப் பிரிவினர், பாதுகாப்பு அமைச்சு, ஜனாதிபதியின் செயலணி ஆகியவற்றினால் வழங்கப்பட்டுள்ள வழிகாட்டல்கள், ஆலோசனைகள் மற்றும் முன்கூட்டிய பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்துகொள்ளுமாறு அவர் கேட்டுக்கொண்டார்.

## ‘1,000 ரூபாய்க்கு...

அப்படியிருக்கையில் என்ன அடிப்படையில் 1,500 ரூபாய் நாள் கூலி வழங்குவேன் என உறுதியளித்தீர்கள்?” எனக் கேட்கப்பட்டபோது,

“அப்போதைய அமைச்சரவையில் நானும், அமைச்சர்களான மனோ கணேசன், திகாம்பரம், ராஜித சேனாரத்ன போன்றவர்களுமே பெருந்தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பை வலியுறுத்திச் சண்டை பிடித்தோம். ஆனால், துரதிர்ஷ்டவசமான அச்சம்பள அதிகரிப்புச் சாத்தியப்படவில்லை. இதனைப் பெற்றுக்கொடுப்பதில் முட்டுக்கட்டையாகச் செயற்பட்டவர்கள் அப்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும்தான். அவர்கள்தான் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்குப் பொறுப்புக்கூற வேண்டும்.

“என்னைப் பொறுத்தவரையில் சம்பள அதிகரிப்பு ஆயிரமா, ஆயிரத்தி ஐநூறா என்பதல்ல முக்கியம். பெருந்தோட்ட மக்களின் பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்து, தோட்டத்துறையை மேம்படுத்துவதனூடாகவே அங்குள்ள தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த முடியும். அந்நிலையை உருவாக்கினால், 1,500 ரூபாய் சம்பளம் என்பதே தேவைப்படாது. அனைவரும் பொருளாதாரத் திருப்தியுள்ளவர்களாக மாறிவிடுவார்கள்” என, சஜித் பிரேமதாஸ மேலும் கூறினார்.

## அநுர, ஷானி...

ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, குற்றப்புலனாய்வுப் பிரிவின் (சிஐடி) முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகர ஆகியோரே இவ்வாறு மனுக்களை, தங்களுடைய சட்டத்தரணிகள் ஊடாக நேற்று (13) தாக்கல் செய்துள்ளனர்.

அந்த ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு தங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ள நோட்டீஸை இரத்துச்செய்யுமாறே, ரிட்-மனுவின் ஊடாகக் கோரப்பட்டுள்ளது.

அவன்காட் நிறுவனத்தின் தலைவர் நிஸ்ஸங்க சேனாதிபதியால் செய்யப்பட்ட முறைப்பாட்டுக்கு அமையவே, மேற்படி இருவரையும் ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகுமாறு நோட்டீஸ் அனுப்பிவைக்கப்பட்டது.

கடந்த அரசாங்கம் எடுத்திருந்த தன்னிச்சையான முடிவுகளால் தனது நிறுவனம் பெரும் இழப்பை சந்தித்ததென, நிஸ்ஸங்க சேனாதிபதி தனது முறைப்பாட்டில் தெரிவித்திருந்தார் என்பதுடன், அநுரகுமார திஸாநாயக்கவும் ஜூன் மாதத்தில், ஆணைக்குழுவின் முன்னிலையில் ஆஜராகி வாக்குமூலமளித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ‘வெற்றிப் பட்டியலில்...

முன்னணியில் வருவதற்காக விருப்புவாக்குகள் அவருக்கு கிடைக்காமல் போய்விடும் என்றார். இதுதொடர்பில், கம்பஹா மாவட்ட, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் குழுத்தலைவர் பிரசன்ன ரணதுங்கவுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

பிரசன்ன ரணதுங்க, குருநாகல் மாவட்டத்துக்கு வருகைதந்து, இன்னும் இரண்டொரு பிரசாரக் கூட்டங்களில் பங்கேற்று உரையாற்றுவராயின், தயாசிரி வசமிருக்கும் இன்னும் கொஞ்சம் விருப்பு வாக்குகளும் அவருக்க இல்லாமற்போகுமெனத் தெரிவித்த ஜோன்ஸ்டன் பெர்னான்டோ, தேர்தல் நெருங்கும் வேளையிலேயே குருநாகலுக்கு பிரசன்னவை நான் அழைத்துள்ளேன் என்றார்.

ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான

## உனவட்டுன...

14 நாள்கள் சுய தனிமைக்கும் அவர் உட்படுத்தப்பட்டுள்ளார் என, உடவட்டுன பொது சுகாதார பரிசோதகர் டீ.வை.லக்ஷான் தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளாகி, கந்தகாடு தனிமைப்படுத்தல் முகாமிலிருந்து வீடுதிரும்பிய ஹபராதுவைச் சேர்ந்த ஒருவருடனேயே, நிலைய அதிபர், நெருங்கிப் பழகியிருந்தார் என அறியமுடிகின்றது. அந்த ரயில் நிலையத்தில் கிருமித்தொற்றொழிப்பு நேற்றுக்காலை தெ ளிக்கப்பட்டது என்பதுடன், அந்த உப-ரயில்.

## ‘வாக்களிக்க தனி நேரம்’

“வாக்களிப்பதற்கான நேரம் ஒரு மணித்தியாலத்தால் நீட்டிக்கப்பட்டுள்ளது. தனிமைப்படுத்தப்பட்டோர், மேலதிகமாக நீட்டிக்கப்பட்ட நேரத்திலேயே வாக்களிக்க முடியும்” என்று, தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய தெரிவித்தார்.

“2020 ஒகஸ்ட் 5ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்குப்பதிவு நேற்று (13) ஆரம்பமாகியது. பொதுச் சுகாதார ஆய்வாளர்கள், மருத்துவ அதிகாரிகள், குடும்ப சுகாதார சேவை அதிகாரிகள், சுகாதார மருத்துவ அலுவலர் அலுவலகங்களின் பிற ஊழியர்களுக்கு நேற்று வாய்ப்பளிக்கப்பட்டது. ஒத்திவைக்கப்பட்ட இராஜாங்கனை பிரதேச செயலாளர் பிரிவுக்கான வாக்குப்பதிவுக்கு, பிரிதொரு தினம் குறிக்கப்படும்” என்றார்.

# எட்டு பேருக்கு பிசிஆர் சோதனை

ஹிரான் பிரியங்கர

ஜோர்தான் நாட்டிலிருந்து வந்த பெண்ணொருவரின் குடும்பத்தைச் சேர்ந்த 8 பேருடைய மாதிரிகள், பிசிஆர் பரிசோதனைக்காக பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளனவென, ஆணமடுவ பிரதேசத்தின் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சமன் அபேரத்ன தெரிவித்துள்ளார்.

குறித்த பெண்ணுடைய கணவர், மூன்று பிள்ளைகள், தந்தை, உறவினர்கள் இருவருடைய மாதிரிகளே, இவ்வாறு பரிசோதனைக்காகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன. அத்துடன், அந்தப் பெண் ஜோர்தானிலிருந்து நாடு திரும்பியிருந்த போது, பிசிஆர் பரிசோதனைக்கு ஆளாக்கப்பட்டிருந்த நிலையில், அவருக்கு கொரோனா வைரஸ் தொற்றியிருப்பதாக உறுதி செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து அவர், ஹம்பாந்தோட்டையிலுள்ள தனிமைப்படுத்தல் மய்யத்துக்கு அனுப்பட்டிருந்துடன், அவருடைய உறனவினர்களுக்கான பரிசோதனைகள் முன்னெக்கப்பட்டு வருகின்றன.

ஊடகவியலாளருக்கு அச்சுறுத்தல்;

# ஊடக அமைப்பு கண்டனம்

பொலிஸ் பரிசோதகர் நியோமால் ரங்கஜீவவால், கொழும்பு புதுக்கடை நீதிமன்ற வளாகத்தில் வைத்து, உள்நாட்டுப் பத்திரிகையொன்றின் புகைப்பட ஊடகவியலாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்ட சம்பவத்துக்கு, இலங்கைப் புகைப்பட ஊடகவியலாளர்கள் சங்கம் கண்டனம் தெரிவித்துள்ளது.

பல்வேறு சர்ச்சைக்குரிய வழக்கு விசாரணைகளில் முக்கிய சாட்சியாளராகவுள்ள மேற்படி பொலிஸ் பரிசோதகர், நீதிமன்ற வளாகத்துக்கு 10ஆம் திகதியன்று வந்திருந்தபோது, புகைப்பட ஊடகவியலாளரான அகில ஜயவர்தனவை அச்சுறுத்தி, அவரிடமிருந்த புகைப்படங்களை பலவந்தமாகப் பெற்றுக்கொண்டமை தொடர்பாகவே, மேற்படி அமைப்பு கண்டனம் தெரிவித்துள்ளது.

மேற்படி விவகாரம் தொடர்பாக பக்கசார்பின்றி விசாரணைகளை முன்னெடுக்குமாறு கோரியுள்ள அமைப்பு, நீதிமன்ற வளாகத்தில் இவ்வாறானதொரு சம்பவம் நி கழ்ந்தமைக்கு கவலையும் தெரிவித்துள்ளது.

# பண்டாரவத்தே ஷான் கைது

துசித குமார சில்வா

பேருவலையில் மீன்பிடிச் செயற்பாடுகளுக்காகச் செல்வோருக்கு, ஐஸ் போதைப்பொருளை விற்பனை செய்தார் என்ற சந்தேகத்தின் பேரில், பண்டாரவத்தே ஷான் எனப்படும் நபர், நேற்று (13) கைது செய்யப்பட்டுள்ளாரென, பேருவலை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யும்போது, அவரிடத்திலிருந்து 2 கிராமும் 350 மில்லிகிராமும் நிறையுடைய ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சந்தேகநபர், போதைப்பொருள் வைத்திருப்பதாகக் கிடைத்த தகவலுக்கமைய முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போதே அவர் சிக்கியுள்ளாரென, பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ‘சம்பிக்கவின் முயற்சிகள் கைகூடவில்லை’

ராஜபக்ஷர்களின் அணிக்குள் ஆதிக்கம் செலுத்த முற்பட்ட முன்னாள் அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்கவின் திட்டம் சாத்தியப்படவில்லை எனத் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் புத்தளம் மாவட்ட வேட்பாளர் பாலித ரங்கே பண்டார, சஜித்தை பிடித்துக்கொண்டு ஐக்கிய தேசிய கட்சியைச் சிதைக்க மேற்கொண்ட முயற்சிகளுக்கு, ஐ.தே.க தலைவர் ரணில் விக்கிரமசிங்க இடமளிக்கவில்லை என்றார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, நல்லாட்சி அரசாங்கத்தில் அரச ஊழியர்களுக்குக் கிடைக்காமல் போன சலுகைகளை தமது ஆட்சியில் பெற்றுக்கொடுப்பதாகக் கூறி வருகிறாறெனவும், நல்லாட்சி அரசாங்கமே அரச ஊழியர்களின் சம்பள அதிகரிப்பு உள்ளிட்ட பல்வேறு சலுகைகளை வழங்கியிருந்தெனவும் அவர் தெரிவித்தார்.



அதனால், உரிமைக்குப் போராடியவர்களின் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியவர்கள், இன்று அரச ஊழியர்களின் உரிமையைப் பெற்றுக்கொடுப்பதாகக் கூறுவது வேடிக்கையானதெனத் தெரிவித்த அவர், நல்லாட்சி அரசாங்கம், அரச ஊழியர்களுக்கு வழங்கிய சலுகைகளை எந்தவோர் அரசாங்கமும் வழங்கியதில்லை என்றார்.

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் ஆட்சிக்கு வந்த நாள் தொடக்கம், நாட்டைச் சுற்றித் திரிகிறார்கள் என்றும் இதுவரையில் பொருள்களின் விலையை உயர்த்துதில் மாத்திரமே சாதனை செய்துள்ளனர் என்றும் ரண்கே பண்டார சாடினார்.

மறுதிசையில், அரச ஊழியர்களை அழைத்து வந்து அச்சுறுத்திக் கொண்டிருக்கிறார்கள் எனவும் சாடிய அவர், அந்த அச்சுறுத்தலுக்கு அஞ்சி நுகர்வோர் அதிகார சபையின் அதிகாரிகள், வியாபாரிகளை அச்சுறுத்தி வருகின்றனர் என்றும் சாடினார்.

ஊடகங்கள் முன்பாக அதிகாரிகளை அச்சுறுத்தியதால், இன்றுவரை நாட்டு மக்களுக்கு எந்தவொரு பலனும் கிடைக்கவில்லை என்றும் அதிகாரிகளை அச்சுறுத்துவதற்கு, ஜனாதிபதியொருவர் அவசியமா என்றும் வினவினார்.

இவ்வாறான நிலையிலேயே, நல்லாட்சி அரசாங்கம் பறித்துக்கொண்டதாகக் கூறப்படும் அரச ஊழியர்களின் உரிமையைப் பெற்றுக்கொடுப்பதாக, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ கூறி வருவதாகத் தெரிவித்த அவர், முதலில் நல்லாட்சி அரசாங்கம் வழங்கிய சலுகைகளைத் தொடர்ந்தும் வழங்குவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை விடுத்தார்.

இவ்வாறான ஒரு தரப்பினருக்கு 2/3 அதிகாரம் கிடைத்தால் அநுராதபுரத்திலுள்ள ஜய ஸ்ரீ மகா போதியையும் வெட்டி வீழ்த்திவிடுவர் என்றும் சாடினார்.

மறுதிசையில் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தை அடையவே முன்னாள் அமைச்சர் பாட்டளி சம்பிக்க ரணவக முயற்சிக்கிறார் எனச் சாடிய அவர், அவர் ஐ.தே.கவின் தலைமைத்துவம், ராஜபக்ஷ அணிக்கான தலைமைத்துவம் என்பவற்றை பெற்றுக்கொள்ள முயன்றபோதும் அந்த முயற்சி சாத்தியப்படவில்லை என்றார்.

கோட்டாவின் ஆட்சியில்

# ‘இளைஞர்களுக்கு எதிர்காலமில்லை’

ஐக்கிய மக்கள் சக்திக்கு ஆட்சியமைக்கும் வாய்ப்பைப் பெற்றுத்தருமாறு கோரிக்கை விடுத்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தேசியப் பட்டியலுக்கு உள்வாங்கப்பட்ட மயந்த திஸாநாயக்க, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில், இளைஞர்களுக்கு எதிர்காலமில்லை என்றும் தெரிவித்தார்.



ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் அமைப்பினரால் நேற்று (13) ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் ஆட்சியில், இந்நாட்டு இளைஞர்களுக்கு எவ்வித நன்மைகளும் கிடைக்கப்போவதில்லை என்பதால், ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியிலேயே இளைஞர்களுக்கான எதிர்காலத்தை உருவாக்க முடியமெனத் தெரிவித்தார்.

அதனால், தபால்மூல வாக்குகளை ஐக்கிய மக்கள் சக்திக்குப் பெற்றுத்தருமாறு கோரிய அவர், நாடு இராணுவ ஆட்சிக்குள் செல்ல இடமளிக்க வேண்டாமென்றும் கேட்டுக்கொண்டார்.

அதேநேரம், கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தலையெடுத்துள்ளதெனத் தெரிவித்த அவர், அதனையும் அரசியலாக்கிவிட வேண்டாமென்று கோரினார்.

அதனால், மேற்படி வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்கு, உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் உண்மைக் காரணங்களை வெளிப்படுத்திக்கொண்டிருந்த ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஆய்வுகூடத்தை அரசாங்கம் மூடியிருப்பது வேடிக்கைக்குரியது என்றும் கூறினார்.

இந்த நிலைமைகளுக்கு மத்தியில், ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தியைக் கண்டு அஞ்சுகிறதெனவும் அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில், சொற்ப ஆசனங்களை மாத்திரமே அக்கட்சி பெற்றுக்கொள்ளப் போகிறதெனவும், அவர் தெரிவித்தார்.

நாட்டில் புதியதொரு ஆட்சிமுறையை தோற்றுவிக்க, ஐக்கிய மக்கள் சக்திக்கு நாட்டு மக்கள் வாக்களிக்க வேண்டுமெனவும் சகலரும் ஒன்றுபட்டு செயற்படக்கூடிய கட்சியொன்றை உருவாக்க முடியுமெனவும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் கொள்கை;

# ‘உயிர்ப் பாதுகாப்புக்கே முன்னுரிமை’

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைவது தொடர்பாக, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பெருமளவில் அவதானம் செலுத்தி வருகின்றார் எனத் தெரிவித்த ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் விமல் வீரவன்ச, நாட்டு மக்களின் உயிர்ப் பாதுகாப்புக்கே ஜனாதிபதி முதலிடம் வழங்கினாரெனவும் தெரிவித்தார்.



கொழும்புத் தமிழ் வியாபாரிகள் சங்கத்தினருடன் அண்மையில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு மேலும் கருத்துரைத்த அவர், கொரோனா அச்சுறுத்தலுக்கு மத்தியில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நாட்டின் பொருளாதாரத்தைக் காப்பதைப் பற்றி மாத்திரம் சிந்திக்கவில்லை என்றும் நாட்டு மக்களின் உயிர்ப் பாதுகாப்புக்கு மாத்திரமே முக்கியத்துவம் அளித்தார் எனவும் தெரிவித்தார்.

அதனாலேயே, நாட்டுக்குள் கொரோனா தொற்றுப் பரவுவதை மட்டுப்படுத்த முடிந்ததோடு, அதனாலேயே பொருளாதாரம் சரிந்து, ரூபாயின் பெறுமதி வீழந்ததெனவும் சுட்டிக்காட்டினார்.

அந்த வீழ்ச்சியிலிருந்து மீட்டு எழும் நோக்கிலேயே, ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கலந்தாலோசித்து நாட்டுக்குள் இறக்குமதி செய்யப்படும் பொருள்கள் தொடர்பான கட்டுப்பாடுகளை விதித்தனர் எனத் தெரிவித்த அவர், அதற்கான வர்தமானி அறிவித்தலும் உடனடியாக விடுக்கப்பட்டது என்றார்.

தற்போது உள்நாட்டு உற்பத்திகளுக்கான கேள்விகள் அதிகரித்து உள்ளதாகவும் ஏற்றுமதி, இறக்குமதிச் செயற்பாடுகள் ஓரளவுக்கு சாத்தியமடைந்துள்ளன என்றும் கூறிய அவர், இறக்குமதிச் செயற்பாடுகள் மீதான தடை தொடர்ந்தும் நீடிக்காதெனவும் விவசாய உற்பத்திகள் உள்நாட்டில் அதிகமாகக் காணப்படுவதால், அது தொடர்பான தான் முன்வைத்த யோசனைக்கு, ஜனாதிபதியிடமிருந்து திருப்திகரமான பதிலொன்று கிடைத்துள்ளது என்றார்.

அத்தோடு, கலாநிதி பி.பீ.ஜயசுந்தர தலைமையில் கூடும் குழுவினரால், ஏற்றுமதிப் பொருள்களுக்கான வரி அதிகரித்துள்ளமை தொடர்பாக ஆராயப்பட்டிருந்தது எனவும், அது தொடர்பான பிரச்சினைகள், 80 சதவீதம் தீர்க்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

மேற்படி தீர்மானங்களால், ரூபாயின் பெறுமதியை அதிகரிக்க முடியுமெனத் தெரிவித்த விமல் வீரவன்ச, உழுந்துப் பிரச்சினையைத் தீர்த்தால், உழுந்து வடையின் பிரச்சினை தீர்ந்துவிடாதெனவும் நாட்டின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் வகையில், எதிர்காலத்தில் உள்நாட்டு விவசாய உற்பத்திகள் முன்னெடுக்கப்படும் என்றும் தெரிவித்தார்.

மறுதிசையில், கொழும்பு மெனிங் சந்தையானது, பேலியகொடை பகுதிக்கு கொண்டு செல்லப்படும்போது, வியாபாரிகள் எவருக்கும் பாதகம் இல்லாத முறையில் அந்தச் செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்ல முடியுமென்றும் தெரிவித்தார்.



# ‘நாட்டை மூட இடமளிக்காதீர்’

நாட்டில் கொரோனா தொற்றாளர்கள் தொகை அதிகரித்து வருவதால், சரியான நேரத்தில் சரியான முடிவை எடுக்குமாறு, அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் சேனால் பெர்னாண்டோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ள அவர், கொரோனா வைரஸ் தொற்றிய நபர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட பிரதேசங்களை அடையாளம் கண்டு, அந்தப் பிரதேசங்களுக்குச் செல்ல கட்டுப்பாடுகள் விதிக்கப்பட வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

தற்போதைய சந்தர்ப்பத்தில் சரியான தீர்மானங்களை எடுக்காது போனால், நாட்டை மீண்டும் மூடநேரிடும் எனவும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவிச் செயலாளர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, நாட்டை மீண்டும் மூடும் இடத்துக்குக் கொண்டுசெல்வதைத் தவிர்க்க, உடனடியாக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கலந்துரையாடவுள்ளதாகவும் உதவிச் செயலாளர் தெரிவித்தார்.

பம்பலப்பிட்டி காலி வீதி மற்றும் மெரின் ட்ரைவ் இடையே, 14 பேர்ச் காணியொன்று, 7 பேர்ச் அளவில் இரண்டாகப் பிரிக்கப்பட்டு விரைவில் விற்பனை செய்யப்படவுள்ளது. இதற்கு தரகர்கள் தேவை. தொடர்புகளுக்கு -078-9935939, 078-9935934




# ‘நெருக்கடியான நிலைமையிலேயே தேர்தலை நடத்த வேண்டியிருக்கிறது’

நெருக்கடியான நிலைமையிலேயே, பொதுத் தேர்தலை நடத்த வேண்டியிருப்பதாகத் தெரிவித்துள்ள ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன, சுகாதாரப் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகவே, கட்சியின் பிரதான பிரசாரக் கூட்டங்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் விளக்கமளித்துள்ளது.



பத்தரமுல்ல - நெலும் மாவத்தையில் உள்ள அக்கட்சியின் தலைமையகத்தில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அக்கட்சியின் முன்னாள் தலைவர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர், நாட்டில் பலமான அரசியல் தலைவர் ஒருவர் இருப்பதாலேயே, கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் சுகாதார நிபுணர்களின் ஆலோசனைகளை ஜனாதிபதி கேட்பதாகவும், அந்த ஆலோசனைகளுக்கு அமையவே, அரசாங்கத்தின் தீர்மானங்கள் மேற்கொள்ளப்படுவதாகவும் கூறினார்.

அரசியல் தலைவர்கள், வைத்தியர்கள், பாதுகாப்புப் பிரிவு, புலனாய்வுத் துறையினர் ஆகியோரை ஒன்றிணைத்து மேற்கொள்ளப்படும் செயற்பாடுகள் காரணமாகவும், கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த முடிந்துள்ளதாகவும் தெரிவித்தார்.

மக்களைப் பாதுகாப்பற்ற நிலைமைக்குத் தள்ள அரசாங்கம் என்றவகையிலும் ஆளுங்கட்சி என்றவகையிலும், தாம் தயாரில்லை எனவும் கூறிய அவர், இதனாலேயே தாம் 3 நாள்கள் ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர் கலந்துகொள்ளும் தேர்தல் பிரசாரக் கூட்டங்களைத் தற்காலிகமாக நிறுத்தியிருப்பதாகவும் தெரிவித்தார்.

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் இல. 52, பாடசாலை ஒழுங்கை, கொழும்பு 03 முகவரியைச் சேர்ந்த தற்பொழுது அஞ்சல் பெட்டி எண். 8845, லிபர்டி பில்டிங், கர்ஹாவுண்ட் , டுபாய், ஐக்கிய அரபு எமீர் ராஜ்ஜியத்தில் வசிக்கும் மிலிந்த அஜந்த ரஜித வர்ணபுர (தே.அ.அ.இல. 811541818 V) ஆகிய நான் அறிவித்துக்கொள்ளும் விடயம் என்னவெனில் 2016 பெப்ரவரி மாதம் 19 ஈம் திகதி இல.52, பாடசாலை ஒழுங்கை, கொழும் 03 முகவரியைச் சேர்ந்த கமுத்தந்த்ரிகே தன்யா அனுஷ்கா வர்ணபுர என்னும் பீரிஸ் (தே.அ.அ.இல. 837955378 V) என்பவருக்கு என்னால் வழங்கப்பட்டதுமாகிய அற்றோணி தத்துவமானது 2020 ஜூன் மாதம் 17 ஆம் திகதி தொடக்கம் இத்தாள் இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

மிலிந்த அஜந்த ரஜித வர்ணபுர

## அற்றோணி தத்துவத்தை இரத்துச்செய்தல்

ஆஸ்திரேலியாவில் யூனிட் 2, 15, 17 மஃபர்சன் வீதி, NSW 20240 முகவரியைச் சேர்ந்த, 8 ஆம் லெவல், 151 மக்குய்யர வீதி, நிவ் சவுத் வேல்ஸ், 2000 ஆஸ்திரேலியாவில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அமைந்துள்ள மற்றும் இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசின் கொழும்பு 02, வாக்ஸ்ஹால் வீதியில் இலக்கம் 137, கொண்ட இடத்தில் தனது கிளை அலுவலகத்தை பதிவுசெய்துக்கொண்டுள்ள நெட் ஸ்டார்ட்டர் Pty Ltd (Net Starter Pty Ltd) (பதிவு எண் 110067966) இல் பணிப்பாளரான அலெக்ஸ்ண்டார் ஜேம்ஸ் பனிச் (Alexander James Panich) ஆகிய நான், மேற்படி குடியரசுக்கும் அதன் பொதுமக்களுக்கும் அறிவித்துக்கொள்ளும் விடயம் என்னவெனில் ஆஸ்திரேலியா நியூ சவுத் வேல்ஸ் இல் உச்சநீதிமன்றத்தின் வழக்குரைஞர் ஹெய்லன் ஆண் பொங்க் (Haylen Ann Pong) 2017 ஜூன் மாதம் 17 ஆம் திகதி எழுதி கையொப்பமிடப்பட்டு மேற்படி குடியரசின் கொழும்பு 05, கிருலப்பனை அவனியுவில், இலக்கம் 57/11, இல் கண்ணசாமி வேலுசாமி செல்லதுரை விஜயகுமாரிடம் (Kannasamy Velusamy Selladurai Vijayakumar) வழங்கப்பட்டிருந்த அற்றோனி தத்துவம் 2020 ஜூன் மாதம் 10 ஆம் திகதி தொடக்கம் இத்தாள் இரத்துச்செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாக இலங்கை ஜனநாயக சோஷலிச குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அலெக்ஸ்ண்டார் ஜேம்ஸ் பனிச்

ஒத்துழைத்தால்

# ‘2ஆவது அலையை முறியடிக்கலாம்’

■ என்.ராஜ், எஸ்.நிதர்ஷன்



இரண்டாவது கொரோனா அலையை வெற்றிகரமாக முறியடிப்பதற்கு, அனைத்து பொதுமக்களும் சுகாதார திணைக்களத்தினருக்கு ஒத்துழைக்க வேண்டுமென, யாழ். மாவட்டச் செயலாளர் க. மகேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொரோனா வைரஸ் அபாயம் மீண்டும் ஏற்பட்டுள்ளதை அடுத்த, யாழ்ப்பாணத்தின் நிலைமை தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், யாழ்ப்பாணக் குடாநாட்டில் மொத்தமாக நான்கு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டிருக்கின்றார்களெனவும் யாழ். மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்றைத் தடுக்கும் செயற்பாடானது சுகாதாரத் திணைக்களம் உள்ளிட்ட திணைக்களங்களால் செயற்படுத்தப்பட்டு வருவதாகவும் கூறினார்.

தற்பொழுது இது, சமூகத் தொற்றாக உருவாகக் கூடிய அபாயம் காணப்படுவதாக உணரப்படுகின்றதெனத் தெரிவித்த அவர், இந்தக் கட்டத்தில் இரண்டாவது அலையாக அதாவது முன்னரோடு ஒப்பிடும்போது தொற்றாளர்களின் எண்ணிக்கை சற்றுக் கூடுதலாகவே காணப்படுகின்றதெனவும் கூறினார்.

எனவே, யாழ். குடாநாட்டில் உள்ள அனைத்து பொதுமக்களும் மிகவும் விழிப்பாக இருந்து, இந்த நிலைமையைச் சமாளிப்பதற்கு, தமக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும், மாவட்டச் செயலாளர் வலியுறுத்தினார்.

அதே நேரத்தில், தற்போது இந்தியாவில் இருந்து சட்டவிரோதமாக யாழ். குடாநாட்டுக்கு வருவோரின் எண்ணிக்கை அதிகமாகக் காணப்படுவதாகத் தெரிவித்த அவர், இவ்வாறு சட்டவிரோதமாக வருகை தருபவர்கள் தம்மிடம் இருந்து தப்பித்து மறைந்திருக்கும் சாத்தியக் கூறுகள் காணப்படுகின்றனவெனவும் கூறினார்.

எனவே, யாழ்ப்பாணம் பாதுகாப்பாக இருக்க வேண்டுமாக இருந்தால், இவ்வாறு சட்டவிரோதமாக வருபவர்களைத் தடுக்க வேண்டுமெனவும் அதாவது உங்களுடைய உறவினர்களோ அல்லது உங்களுக்குத் தெரிந்தவர்களோ இவ்வாறான விடயங்களை அறிந்திருந்தால், அது தொடர்பில் அருகில் உள்ள கிராம சேவையாளர் அல்லது பொலிஸார் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உடனடியாகத் தெரியப்படுத்துமாறும், அவர் பொதுமக்களிடம் கேட்டுக்கொண்டார்.



சுயேச்சைக் குழு

## வேட்பாளர்கள் பயணித்த வான் விபத்தில் சிக்கியது

■ க.அகரன்

வவுனியாவிலிருந்து தேர்தல் பரப்பரைக் கூட்டத்துக்குச் சென்றுவிட்டுத் திரும்பிய வானொன்று, நேற்று முன்தினம் (12) இரவு விபத்துக்குள்ளானதில், அதில் பயணித்த சுயேச்சைக் குழு வேட்பாளர்கள் இருவர், காயங்களுக்குள்ளாகி உள்ளனரென, பொலிஸார் தெரிவித்தனர்.

முல்லைத்தீவில் மக்கள் சந்திப்புகளை நடத்திவிட்டு, கிளிநொச்சி ஊடாக வவுனியாவுக்கு மீண்டும் திரும்புகையிலேயே, இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

பரந்தன் ஏ35 வீதியில், மாடுகள் வீதியில் நடந்து சென்றபோது, திடீரென்று சில மாடுகள் வீதியின் நடுவே வந்தமையால், வேட்பாளர்கள் சென்ற வான் கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளாகியுள்ளது என, பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவ்விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை, பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கேரளா கஞ்சா 124 கி.கி மீட்பு; இருவர் கைது

■ செந்தூரன் பிரதீபன்

வட்டுக்கோட்டையில் நேற்று முன்தினம் (12) மாலை மேற்கொண்ட திடீர் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது, 124 கிலோகிராம் கேரளா கஞ்சாவுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

சுழிபுரம் மேற்கு பகுதியில் ஓட்டோவில் கஞ்சா மூடைகளை ஏற்றிக் கொண்டு சென்ற போதே, இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் சுழிபுரம் பகுதியைச் சேர்ந்தவர்கள் எனவும் கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி 10 மில்லியன் ரூபாய்க்கும் அதிகமெனவும் வட்டுக்கோட்டை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள், மேலதிக விசாரணைக்காக பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டு, விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

## கொரோனாவிலிருந்து பாதுகாக்க தலைமுடிக் காணிக்கை

■ எம்.றொசாந்த்



நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் நடவடிக்கையை முன்னெடுக்கும் முப்படை, பொலிஸார் உட்பட சுகாதார சேவையினருக்கு தொற்று ஏற்படாதவாறு பாதுகாக்க, 108 நாள்கள் விரதமிருந்த ஒருவர், தனது நேர்த்தியை நிறைவு செய்யும் வகையில், தலை முடியைக் காணிக்கை செய்துள்ளார்.

யாழ்ப்பாணம், கரவெட்டிப் பகுதியைச் சேர்ந்த சின்னத்தம்பி நடராசா (81 வயது) ஓய்வுபெற்ற இராணுவ உத்தியோகத்தர் ஒருவரே இவ்வாறு தலை முடியைக் காணிக்கை செய்துள்ளார்.

இந்தச் சம்பவம் மக்கள் மத்தியில் பெரும் நெகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், அவரின் செயல் குறித்து பாராட்டுகளும் தெரிவிக்கப்பட்டுள்ளன.

## 178 இலங்கையர்கள் நாடு திரும்பினர்

மாலைதீவில் சிக்கியிருந்த 178 இலங்கையர்கள் நேற்று (13) நாடு திரும்பினர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்குச் சொந்தமான விசேட விமானத்தில் மத்தல விமான நிலையத்துக்கு இவர்கள் வருகை தந்தனர்.

நாடு திரும்பிய அனைவருக்கும் பீ.சி. ஆர் பரிசோதனைகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

பாதாள உலகக் குழு உறுப்பினர்களின்

## உதவியாளர்கள் இருவர் கைது

பாதாள உலகக் குழு உறுப்பினரான அங்கொட லொக்கா, பெத்தியாகொட சங்க ஆகியோரின் உதவியாளர்கள் இருவர், ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முல்லேரியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உடுமுல்ல பகுதியில் வைத்து நேற்று (13) காலை இவர்கள் இருவரும் 05 கிராம் ஹெரோய்னுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில், 32 வயதுடைய விதானகமகே கயான் தர்ஷன எனும் கய்யா என்பவர் அங்கொட லொக்காவின் உதவியாளர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இவர், 2019ஆம் ஆண்டு ஹங்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சுமேத எனும் மணல் வியாபாரியின் கொலை சம்பவம் தொடர்பான பிரதான சந்தேக நபர் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, கைதுசெய்யப்பட்ட மற்றைய நபரான நதீக சேபால தஸநாயக்க எனும் ரன் கேல்ல பெத்தியாகொடவின் உதவியாளர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



## தபால்மூல வாக்களிப்பு

ஒகஸ்ட் 5ஆம்திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான தபால்மூல வாக்களிப்பு, நாடளாவிய ரீதியில் நேற்று (13) ஆரம்பமானது. இதன்படி, மட்டக்களப்பு மாவட்டத்தில் சுகாதாரத்துறை அதிகாரிகளும் ஊழியர்களும் நேற்று மிகவும் ஆர்வத்துடன் வாக்களித்தனர். மட்டக்களப்பு மாவட்டத்தின் 14 பிரதேச செயலாளர் பிரிவுகளிலும் உள்ள சுகாதார வைத்திய அதிகாரிகள் அலுவலகத்தில் தபால் மூல வாக்களிப்பு நடவடிக்கைகளில், சுகாதாரத் துறை ஊழியர்கள் பங்குகொண்டனர். சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி வாக்களிப்புகள் நடைபெற்றதுடன், வாக்களிப்பு நிலையங்களின் பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டிருந்தது.

(படங்கள் – ரீ.எல்.ஜவ்பர்கான், எம்.எஸ்.எம்.நூர்தீன், வா.கிருஸ்ணா, ஏ.எச்.ஏ. ஹுஸைன், வ.சக்தி)

சுதந்திரமானதும் நீதியானதுமான

## ‘தேர்தலை நடத்த முயல்கிறோம்’

■ என்.ராஜ், எம்.றொசந்த்



தேர்தல் திணைக்களத்துடன் இணைந்து, சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலை நடத்த முயல்வதாக, கொரோனா கட்டுப்பாட்டுச் செயலணியின் பிரதிநிதி பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று (13) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்துரைத்த அவர், “எமக்கு தற்போதுள்ள பிரச்சினை, கொவிட் 19 ஆகும். இது, நாடளாவிய ரீதியிலுள்ள ஒரு பிரச்சினையாகும். உலக சுகாதார ஸ்தாபனம், எப்போது கொவிட் 19 இல்லை என அறிவிக்கின்றதோ, அன்றுவரை எமக்கு இந்தக் கொரோனா பிரச்சினை தொடரும்” என்றார்.

“இந்நிலையில், தேர்தலை எவ்வாறு நடத்துவதென்பது தொடர்பில் நாம் பல முன்னெடுப்புகளை மேற்கொண்டுள்ளோம். அதாவது, தனிமைப்படுத்தல் சட்டம், சுகாதார நடைமுறைகள் போன்ற விடயங்களைப் பின்பற்றித் தேர்தலை நடத்த நாங்கள் முயல்கின்றோம். தேர்தல் திணைக்களமும் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது.

“பதில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு இணங்க, நானும் பொலிஸ் பேச்சாளரும், வடக்குக்கு விஜயம் மேற்கொண்டு, சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி, தேர்தல் திணைக்களத்துடனும் சுகாதாரத் திணைக்களங்களுடனும் இணைந்து, தேர்தலை நடத்துவது தொடர்பில் ஆராயவுள்ளோம். அதேபோல், வவுனியாவுக்கும் செல்லவுள்ளோம்.

“இதேவேளை, பொதுமக்களின் ஒத்துழைப்பு இந்த விடயத்தில் மிகவும் முக்கியமானது. அதாவது அனைவரும் முகக்கவசம் அணிந்து வாக்களிப்பு நிலையங்களுக்கு வருகை தர வேண்டும். அதேபோல் சுகாதார நடைமுறைகளை கட்டாயம் பின்பற்ற வேண்டுமென்பது எமது கோரிக்கையாக இருக்கிறது” என்றார்.

## மன்னாருக்கு மஹிந்த தேசப்பிரிய திடீர் விஜயம்

■ எஸ்.றொஜேரியன் லெம்பேட்



தேர்தல் ஆணைக்குழு தவிசாளர் மஹிந்த தேசப்பிரிய, நேற்று (13) காலை மன்னாருக்கு திடீர் விஜயம் மேற்கொண்டு வருகை தந்திருந்தார்.

வருகை தந்த தேர்தல் ஆணையாளர், மன்னார் மாவட்டத் தேர்தல் அலுவலகத்துக்குச் சென்று மாவட்ட உதவித் தேர்தல்கள் ஆணையாளர் ஜே.ஜெனிற்றனுடன் கலந்துரையாடினார்.

இதன்போது, மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் சி.ஏ.மோகன்றாஸ், உரிய அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர்.

அதனைத் தொடர்ந்து, நாடாளுமன்றத் தேர்தலை முன்னிட்டு, மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில், பெண்களுக்கான வாக்கு வீதத்தை அதிகரிக்கும் வகையில் நடைபெற்ற வீதி நாடகத்தையும் தேர்தல் ஆணையாளர் பார்வையிட்டார்.

சுகாதார நடைமுறைகளுக்கு அமைவாக, மன்னார் புதிய பஸ் தரிப்பிடத்தில் காலை 10.15 மணியளவில் இந்த வீதி நாடம் நடைபெற்றது.

## தேர்தல் வியூகம் குறித்து கலந்துரையாடல்

■ வடமலை ராஜ்குமார்

இலங்கை தமிழரசுக் கட்சியின் திருகோணமலையின் 06 கோட்டங்களில் உள்ள மூலக்கிளைகளின் பிரதிநிதிகளுக்குப் பொதுத் தேர்தலை வெற்றி கொள்வது தொடர்பாக விளக்கமளிக்கும் கலந்துரையாடல், தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் இல்லத்தில் நேற்று (13) காலை நடைபெற்றது.

இதன்போது, வேட்பாளர்கள் உரையும் தேர்தலை வெற்றி கொள்வதற்கான வியூகம் தொடர்பான விளக்கங்களும் முன்வைக்கப்பட்டன.

இக்கூட்டத்துக்கு த.தே.கூ.தலைவர் இரா. சம்பந்தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரெட்ணசிங்கம், உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், உறுப்பினர்கள், கட்சியின் செயற்பாட்டாளர்கள், மூத்த உறுப்பினர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

பஸ்களுக்குள் மேற்கொள்ளப்படும்

## விற்பனைகளை நிறுத்த அறிவுரை



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக, அரச மற்றும் தனியார் பஸ்களுக்குள் மேற்கொள்ளப்படும் நடமாடும் விற்பனைகளை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு, போக்குவரத்து முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த அமரவீர, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இலங்கை போக்குவரத்து சபைக்கும் அறிவுறுத்தியுள்ளார்.

மார்ச் தொடக்கம் ரயில்களில் நடமாடும் விற்பனை நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு ரயில்வே திணைக்களம் நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தது.

இந்நிலையில், கொரோனா வைரஸ் தக்கம் உள்ளபோதும் நடமாடும் வியாபாரிகள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி பொருள்களை விற்பதில்லையென, பொதுமக்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகளுக்கு அமையவே, மேற்படித் தீர்மானத்தை மேற்கொண்டுள்ளதாக, அமைச்சர் தெரிவித்தார்.

இந்த முறைப்பாட்டையடுத்து, பஸ்களுக்குள் விற்பனை நடவடிக்கைகளை கட்டுப்படுத்துவதற்கு பாதுகாப்பு அதிகாரிகளின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறு அமைச்சர் மஹிந்த அமரவீர, சம்பந்தப்பட்டோருக்கு அறிவுறுத்தியுள்ளார்.

கல்வி அமைச்சின்

## பொதுமக்களுக்கான சேவை இடைநிறுத்தம்




கொவிட் 19 நிலைமையின் காரணமாக, கல்வியமைச்சின் பொதுமக்களுக்கான சேவை, மீள அறிவிக்கும் வரை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

பொது இடங்களில் ஒன்று கூடுவதன் மூலம், பொதுமக்களின் சுகாதாரத்துக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்கான அனர்த்த நிலையை கவனத்திற்கொண்டு, புதன்கிழமைகளில் கல்வியமைச்சில் நடைபெறும் பொதுமக்கள் தினம் மீள அறிவிக்கும் வரையில் தற்காலிகமாக நிறுத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சின் ஊடகப்பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில், “இந்தத் தீர்மானத்தின் காரணமாக, பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமத்துக்கு வருந்துவதுடன், இந்த கால எல்லைப்பகுதிக்குள் கல்வியமைச்சிடம் இருந்து தகவல்களை தெரிந்துகொள்வதற்கு அல்லது ஏதேனும் சேவையை பெற்றுக்கொள்வதற்கு எதிர்பார்ப்போர், 1988 என்ற உடனடி தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொள்ள முடியும்” எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வெடிபொருளை வெடிக்க வைத்த நால்வர் கைது

■ எம்.றொசாந்த்

குப்பைக்குள் இருந்து மீட்கப்பட்ட வெடிபொருளை வெடிக்க வைத்த நால்வர் இளவாலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் மூவர் வெடிபொருள் வெடித்ததில் கைகளில் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கீரிமலை கோவில் பகுதியில் நேற்று முன்தினம் (12) மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

குப்பைக்குள் காணப்பட்ட பற்றியுடன் கூடிய வீரியம் குறைந்த வெடிபொருளை மேற்படி நால்வரும் கண்டெடுத்து, அதை வெட்டி நெருப்பு வைத்த போது அது வெடித்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்கள், சட்டத்துக்கு புறம்பாக வெடிபொருளை வெடிக்க வைத்ததுடன், அதன் பின்னர் ஓடி ஒழித்தனர். அதனால் பொலிஸாரும் இராணுவத்தினரும் முன்னெடுத்த சோதனை நடவடிக்கையின் போதே, மேற்படி நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

## கொரோனா அச்சம் நீங்கவில்லை;
# ‘மறுபரிசீலனை செய்வது முக்கியம்’


பொருளாதாரத்தை மேம்படுத்தவும், மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையிலுமே நாடு திறக்கப்பட்டது. ஆனால், மக்கள் தேவையில்லாமலும் அநாவசியமான முறையிலும் அலைந்து திரிந்தனர் எனத் தெரிவித்த சுகாதார அமைச்சின் பணிப்பாளர் நாயகம், விசேட வைத்திய நிபுணர் அனில் ஜாசிங்க, இதை மறுபரிசீலனை செய்வது முக்கியமானதாகும் என்றார்.

அநுராதபும்-ராஜாங்கனையில் இடம்பெற்ற மரண வீடொன்றில், சுகாதார வழிகாட்டல்கள் மீறப்பட்டன. பொதுத் தேர்தலை நடத்துதல், இதர செயற்பாடுகளை முன்னெடுப்பதற்காக வழங்கப்பட்ட சுகாதார வழிகாட்டல்களுக்கு சட்ட அதிகாரம் வழங்கப்படுவது முக்கியமானதாகுமெனத் தெரிவித்த அவர், அந்த வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கைளை எடுத்துள்ளது என்றார்.

அநுராதபுரம், ராஜாங்கனை பிரதேச மரண வீடொன்றில், சுகாதார வழிகாட்டல்கள் முழுமையாக மீறப்பட்டன. அதனூடாகவே, கொரோனா வைரஸ் தொற்று, அப்பிரதேசத்தில் வியாபித்திருக்கலாமென சந்தேகம் கொண்ட அவர், சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றாவிடின், எவ்வாறான விபரீதங்கள் ஏற்படும் என்பதற்கு, இது நல்லதோர் உதாரணமாகும். ஆகையால், மக்கள் விழிப்பாக இருக்கவேண்டுமெனக் கேட்டுக்கொண்டார்.

“நாட்டை திறந்ததற்கு மக்கள் அநாவசியமான முறையில் அலைந்துதிரிந்தனர். இது தொடர்பில் மறுபரிசீலனை செய்வது முக்கியமாகும். பாடசாலைகள் யாவும் ஐந்து நாள்களுக்கு மூடப்பட்டுள்ளன. இது பாதுகாப்பு நடவடிக்கையின் ஓர் அங்கமாகும். எனினும், இவை தொடர்பில் மக்கள் அவதானமாக இருக்கவேண்டும்” என்றார்.

கடந்த சில வாரங்களில் சென்றதைப்போல, எப்போதுமே மக்கள் சுற்றுலா செல்லவில்லை. தனது, தன்னுடன் இருப்போர், ஏனையோரின் பாதுகாப்பு குறித்து அவதானம் செலுத்தவேண்டுமெனக் கேட்டுக்கொண்ட அவர், பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பவும் மக்கள் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலேயே நாடு முழுமையாகத் திறக்கப்பட்டது. எனினும், கொரோனா வைரஸின் அச்சம் நீங்கவில்லை என்றார்.



## இளைஞர்களுக்கே ஐக்கிய தேசிய கட்சி:
# ‘மொட்டே எனது அரசியல் எதிரி’

■ 2019இல் சிங்கள பௌத்த வாக்குகள் கிடைக்கவில்லை ■ 2005இல் தமிழர்கள் தோற்கடித்தார்கள்

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன மாத்திரமே, தனது அரசியல் எதிரி என, முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சமூக வலைதளமொன்றுக்கு வழங்கியுள்ள பிரத்தியேக செவ்வியிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்தச் செவ்வியில் மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைப் பதவியை, அர்ப்பணிப்புடனும் பொறுமையடனும் செயற்படும் இளைஞர்களுக்கு வழங்குவதற்கு, தான் தயாராக இருப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

“எனக்குக் கிடைத்த ஜனாதிபதி பதவிக்கான வாய்ப்புகளையே, முன்னாள் ஜனாதிபதி விஜேதுங்கவுக்கு வழங்கினேன். அதுபோல, 2011ஆம் ஆண்டு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கும் 2015ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கும் வழங்கியிருந்தேன்.

“ஜனாதிபதி வேட்பாளராக, ஐ.தே.கவிலிருந்து ஒருவர் களமிறக்கப்பட்டால், ஒருபோதும் ஆதரவு வழங்குவதில்லை என, மக்கள் விடுதலை முன்னணி கூறியுள்ளது. இதையே, சோபித தேரரும் சிவில் அமைப்புகளும் கூறியிருந்தார்கள்.

“எனவே மைத்திரிபால சிறிசேனவை ஜனாதிபதியாக்கி, 19ஆம் திருத்தச் சட்டத்தைக்கொண்டு வந்து, அதிகாரங்களை பிரதமர் வசப்படுத்திக் கொண்டேன். ஐ.தே.கவிலிருந்து சிலர் தற்போது வெளியேறியுள்ளார்கள். காலம் முழுவதிலும் இதுபோன்று பலர் கட்சியை விட்டு வெளியேறியுள்ளார்கள். இது, அரசியலின் ஒரு பகுதி.

“நடைபெறவுள்ள பொதுத் தேர்தலில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவுடனேயே, எனக்கு போட்டியுள்ளது. கொவிட் - 19 பரவலைக் கட்டுப்படுத்துவதற்கும் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்கும், ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்கும் யானை சின்னத்துக்கு வாக்களிக்க வேண்டும்.

“எதிர்வரும் பொதுத்தேர்தலில் பெரும்பான்மை கிடைத்தால், ஜனாதிபதியுடன் இணைந்து செயற்பட முடியும். இல்லை என்றால், எதிர்க்கட்சியில் அமர்வோம். ராஜபக்ஷக்கள், பாதுகாப்பானவர்கள் என்பதை கூற முடியாது. முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தவிர, அக்குடும்பத்தின் ஏனைய அனைவர் மீதும் வழக்குகள் தொடரப்பட்டுள்ளன.

“மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன மகேந்திரனை, நாட்டுக்கு அழைத்து வருவதாக, நான் ஒருபோதும் வாக்குறுதியளிக்கவில்லை. 2015 பொதுத்தேர்தலில், எனக்கு பாரியளவிலான சிங்கள, பௌத்த வாக்குகள் கிடைத்தன. எனினும் 2019ஆம் ஆண்டும் எமக்கு பௌத்த சிங்கள வாக்குகள் கிடைக்கவில்லை என்பதை ஏற்றுக்கொள்கிறேன்.

“2005ஆம் ஆண்டு, தமிழ் மக்களின் வாக்குகளால் ஜனாதிபதித் தேர்தலில் நான் தோல்வியடைந்தேன். முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தனவைத் தோல்வியடைய வைப்பதற்கு, களனி விகாரையின் விகாராதிபதி மாபிட்டிகம புத்தரகித தேரர் செயற்பட்டார்.

“நாட்டின் எந்தவொரு பௌத்த விஹாரைகளையும் வைத்து, நானோ, ஐக்கிய தேசிய கட்சியோ அரசியல் செய்ததில்லை. முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை பொதுவெளியில் பகிரங்கமாக எந்தவோர் இடத்திலும் விமர்சித்ததில்லை.

“தவறுகளைப் பற்றியே தற்போதைய அரசாங்கம் கூறி வருகின்றது. கொரோனா வைரஸ் பரவலுக்குப் பின்னர், பொருளாதாரம் முழுமையாகப் வீழ்ச்சியடைந்துள்ளது. இலங்கைக்கு உதவும் நாடுகளுடன் முரண்பட்டால், முன்நோக்கிப் பயணிப்பது சிரமம்.

இதேவேளை, கொவிட் - 19ஐக் கட்டுப்படுத்துவதற்கு, முதல் மூன்று வாரங்களில் அரசாங்கம் செயற்பட்ட முயற்சிகள் பாராட்டுக்குரியது என்றும் கொவிட் - 19 பரவலை, ஆரம்பத்தில் கட்டுப்படுத்த முடியுமாக இருந்தால், ஏன் இரண்டாவது அலையைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்றும் அவர் கேள்வியெழுப்பியுள்ளார்.



# ‘ஊரடங்குச் சட்டம் குறித்து இன்னும் தீர்மானமில்லை’



கொரோனா வைரஸ் பரவல் காரணமாக மீண்டும் ஊடரங்குச் சட்டத்தை அமல் படுத்துவது தொடர்பில் எந்தவித தீர்மானமும் எடுக்கப்படவி ல்லையெனத் தெரிவித்த பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜாலிய சேனாரத்ன, நிலைமையை பொறுத்து, தீர்மானத்தில் மாற்றம் ஏற்படும் என்றார்.

யாழ்ப்பாணத்துக்கு நேற்று (13) வருகைதந்திருந்த அவர், ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கந்தக்காடு புனர்வாழ்வு நிலையத்தில், இதுவரையிலும் 506 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளமை, அடையாளம் காணப்பட்டுள்ளது. இதில், 429 பேர் புனர்வாழ்வு பெறுவோர், 47 பேர் ஊழியர்கள் ஆவர் எனத் தெரிவித்த அவர், இவ்வாறானவர்களுடன் தொடர்புகளை பேணியதன் மூலம் 30 பேருக்கு கொரோனா தொற்றியுள்ளது என்றார்.

# ‘மக்களுக்குச் சேவையாற்றும் தலைவர்கள் வேண்டும்’



மக்களின் கஷ்டங்களை அறிந்த மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய அரசியல் தலைவர்களை நாடாளுமன்றத்துக்கு மக்கள் அனுப்ப வேண்டுமென, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கொழும்பு மாவட்ட வேட்பாளர், சட்டத்தரணி மதுர விதானகே தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்து கருத்துரைத்த அவர், மக்களின் கண்களுக்குப் புலப்படும் வகையில் பல வேலைத் திட்டங்களை நான் மேற்கொ ண்டுள்ளேன். இதனாலேயே, இன்று நான் தேர்தலில் களமிறங்க முடிந்துள்ளது. ஏனைய அரசியல்வாதிகளைப் போன்று மக்களின் பயணத்தைச் சொந்த தேவைகளுக்குப் பயன்படுத்தவில்லை. கோட்டை நகர சபை ஊடாக கொழும்பு வாழ் மக்களுக்கு சிறந்த சேவை யாற்றியுள்ளேன் என்பதை மக்கள் அறிவார்கள் என்றார்.

அத்துடன், அரசியல் மூலம் நாடா ளுமன்றத்துக்கு தெரிவாவதானது, மக்களுக்குச் சேவை யாற்றுவதற்காகும் எனக் கூறிய அவர், மக்களின் விருப்பு வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் சிலர் தங்களது கடமைகளை மறந்துள்ளனர் என்றார்.

மேலும், நாட்டில் விருப்பு வாக்குமுறைமை இல்லாதொழிக்கப்பட வேண்டுமெனவும் வேட்பாளர் மதுர விதானகே மேலும் தெரிவித்தார்.

# ‘தேர்தலை ஒத்திவைக்க தேவையில்லை’

நாட்டில் தற்போது ஏற்பட்டிருக்கும் நிலைமையின் கீழ், பொதுத் தேர்தலை ஒத்திவைப்பதற்கு எவ்விதமான தேவையும் இல்லையென முன்னாள் அமைச்சர் பீல்ட் மார்சல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

தற்போதைய நிலைமை, இதற்கு மேல், அதிகாரித்தால் மட்டுமே அது தொடர்பில் கலந்துரையாடப்பட வேண்டும் எனத் தெரிவித்த அவர், தேர்தலை ஒத்திவைப்பதால், செலவுகள் அதிகரிக்கும் அதனூடாக மக்களின் கடன்சுமையே கூடும் என்றார்.



களனியில் இடம்பெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு அவர் தெரிவித்தார்.

தேர்தலை எப்படியாவது நடத்திமுடிக்க வேண்டும் எனத் தெரிவித்த அவர், தேர்தலை ஒத்திவைப்பது சகல விதத்திலும் நட்டமானது என்றார்.

# பஸ்களில் வியாபாரத்தை நிறுத்த ஆலோசனை

பொதுப் போக்குவரத்துச் சேவைகளில் ஈடுபடும் பஸ்களில் மேற்கொள்ளப்படும் சகல விதமான வியாபார நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்கு போக்குவரத்து அமைச்சு ஆலோசித்து வருகின்றது. இது தொடர்பில் நடவடிக்கைகளை எடுக்குமாறு போக்குவரத்து அமைச்சர் மஹிந்த அமரவீர, தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் இலங்கைப் போக்குவரத்து சபைக்கும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

“கொரோனா வைரஸ் வியாபித்திருக்கும் நிலையில், நடமாடும் வியாபாரிகள் சிலர், முறையான சுகாதார முறைமைகளைப் பின்பற்றாது. வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இது தொடர்பிலான முறைப்பாடுகள் பயணிகளிடமிருந்து கிடைத்துள்ளன” என்றார்.

ரயில்களில் நடமாடும் வர்த்தகத்துக்கு மார்ச் மாதத்திலிருந்து தடைவிதிக்கப்பட்டது எனத் தெரிவித்த அமைச்சர், எனினும், பொது போக்குவரத்து சேவைகளில் ஈடுபடும் பஸ்களில், நடமாடும் வர்த்தகர்கள், சுகாதார வழிகாட்டல்களைக் கடைப்பிடிக்காமல் வர்த்தகத்தில் ஈடுபடுகின்றனர். இது, பயணிகளுக்கு பெரும் அசௌகரியத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

இவ்வாறான நடமாடும் வியாபார நடவடிக்கைகளை உடனடியாக இடைநிறுத்த நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர், நிலைமையைக் கட்டுப்படுத்த தேவைப்படின், பாதுகாப்புப் பிரிவினரின் ஒத்துழைப்புப் பெற்றுக்கொள்ளப்படும் என்றார்.



# ‘நாட்டை கட்டியெழுப்ப 2/3 வேண்டும்’

■ என்.ஜெயரட்ணம்

ஐக்கிய தேசிய கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி போன்ற கட்சிகள், தற்போது அரசியல் ரீதியாக அடைந்துவரும் பின்னடைவுகள் காரணமாக, மக்கள் விரக்தியடைந்துள்ளனனர் என, ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளரும் முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினருமான சந்திபானு அதிகாரம் தெரிவித்தார்.

களுத்துறையில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், களுத்துறை மாவட்டத்தில் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள், மதவாதக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுத்துச் செல்லும் சந்தர்ப்பவாத அரசியல் கொள்கைகளைப் புறந்தள்ளி, வேறுபாடுகளை மறந்து, தாமாகவே முன்வந்து



பொதுஜன பெரமுனவுடன் இணைந்து செயற்படுவதை, கண்கூடாக காணக்கூடியதாக உள்ளது என்றார்.

கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ், நாட்டில் எவ்வித அபிவிருத்தியும் முன்னெடுத்துச் செல்லாத போதும், பணத்தை மட்டுமே குறிக்கோளாகக் கொண்டு தேசிய வளங்களை வெளிநாடுகளுக்குத் தாரை வார்த்து கொடுத்தனர் என்றார்.

## அத்தியாவசியப் பட்டியலிலிருந்து
# ‘கோதுமை மாவை நீக்கவும்’

கோதுமை மா இறக்குமதியை உடனடியாக கைவிட்டு, அரிசிமா பயன்படுத்துவதை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென, அரசாங்கத்துக்கு யோசனையொன்றை முன்வைத்துள்ளதாக, அகில இலங்கை ஒன்றிணைந்த விவசாயிகள் அமைப்பு தெரிவித்துள்ளது.

அத்தியாவசிய பொருள்களின் பட்டியலிலிருந்து கோதுமை மாவை நீக்கிவிடுமாறு தெரிவித்துள்ள அவ்வமைப்பின் தலைவர் சுனில்



கமகே, அதற்காக, அரசாங்கம் தலையிடவேண்டும் என்றார்.

தற்போதைய அரசாங்கம் நெல் உற்பத்தியை அதிகரிப்பதற்கு எடுத்துள்ள நடவடிக்கைகளினால், கடந்த போகத்திலும் இந்தப் போகத்திலும் அறுவடை செய்யப்பட்ட நெல்லை, உள்நாட்டுத் தேவைக்காக 14 அல்லது 15 மாதங்களுக்கு பயன்படுத்த முடியும் என்றார்.

“அரசாங்கம் வழங்கும் நிவாரணம் மற்றும் ஒரு கிலோ கிராம் நெல்லுக்காக, 50 ரூபாய் நிவாரணம் வழங்கமுடியும். நெல் உற்பத்தியை உடனடியாக அதிகரிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளமையால், எதிர்வரும் போகங்களில், கடந்த போகங்களை விடவும் 25 சதவீதம் அல்லது அதற்கு மேல் அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்” என்றார்.

இந்நாட்டின் பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்கும், விவசாய கைத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கும் நேரடியான பங்களிப்பை விவசாயிகள் வழங்குகின்றனர் எனத் தெரிவித்த அவர், துணை உணவு பயிர்களை பயிரிட ஊக்குவிக்க வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# ‘எனக்கு உயிர் அச்சுறுத்தல்’
## சிறையை மாற்றுமாறு கஞ்சிபான மனு

தென் மாகாணத்துக்கு வெளியிலுள்ள வேறுறொரு சிறைச்சாலைக்கு தன்னை மாற்றுமாறு, சிறைச்சாலை அதிகாரிகளுக்கு உத்தரவிடுமாறு கோரி, பாதாள உலகக் குழு தலைவரான கஞ்சிபான இம்ரான் என்றழைக்கப்படும் மொஹமட் வசீம் மொஹமட் இம்ரான், உயர்நீதிமன்றத்தில் மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

பதில் சிறைச்சாலைகள் ஆணையாளர் துஷார உப்புல்தெனிய, பூஸா சிறைச்சாலை அதிகாரி, அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா உள்ளிட்ட ஒன்பது பேர் மனுவில், பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

தனது உயிருக்கு அச்சுறுத்தல் இருக்கிறது. ஆகையால், தன்னால் பூஸா சிறைச்சாலையில் இருக்க முடியாது. எனது நிலைமையை கருத்தில் கொண்டு, வேறு சிறைச்சாலைக்கு மாற்றுமாறும் அம்மனுவில் கோரப்பட்டுள்ளது.

# சஜித் பிரேமதாஸவின் தூரநோக்குப் பார்வை...

ஊடகப் பிரதானிகளை நேற்றைய தினம் கொழும்பில் சந்தித்த ஐக்கிய மக்கள் சக்தியில் தலைவர் சஜித் பிரேமதாஸ, தன்னுடைய கொள்கை விளக்கத்தை விலாவாரியாகத் விவரித்திருந்தார். ஜனாதிபதித் தேர்தல் பரப்புரைகளின்போது, நாடுபூராகவும் ஓடித்திரிந்து, மக்களைச் சந்தித்துத் தன்னுடைய எதிர்காலத் திட்டங்களை விளக்கியதுபோல், தற்போது நடைபெறவுள்ள பொதுத் தேர்தல் களத்திலும், ஐக்கிய மக்கள் சக்தியின் தூரநோக்குத் திட்டங்களைத் தெளிவுபடுத்தி வருகிறார்.

ஊடகங்களின் பிரதானிகளை ஒருமித்துச் சந்திப்பதென்பதை சஜித் பிரேமதாஸ இதற்கு முன்னர் பயன்படுத்தத் தவறியிருந்தார். ஆனாலும், இம்முறை அக்குறையை நிவர்த்திக்கும் விதமாக, ஊடகப் பிரதானிகளைச் சந்தித்துத் தன்னுடைய தூரநோக்குத் திட்டங்களைத் தெளிவுபடுத்த முன்வந்திருப்பது நல்ல முயற்சி. மற்றையவர்களைக் குறை கூறுவதும், மற்றையவர்களில் பிழை காண்பதும் தன் அரசியல் எதிர்காலத்துக்குச் சிறந்ததல்ல என்பதை உணர்ந்திருக்கும் சஜித் பிரேமதாஸ, தன்னுடையதும் தன் கட்சியினதும் தூரநோக்குக் கொள்கைகளை மக்கள் மயப்படுத்த எடுத்திருக்கும் முயற்சி பாராட்டுக்குரியது.

90களின் ஆரம்பத்தில் உலகளாவிய ரீதியில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியை, உலகநாடுகள் எவ்வாறு கையாண்டனவென்பதையும், அதற்காக எத்தகைய திட்டங்களை உலகம் கையாண்டது என்பதையும் தெளிவாகப் புரிந்து வைத்திருக்கின்றார் சஜித் பிரேமதாஸ. 1929களில் ஏற்பட்ட 'உலகின் பெரும் மந்தநிலை' என வர்ணிக்கப்படும் உலக பொருளாதார வீழ்ச்சியில் சிக்கி அமெரிக்கப் பொருளாதாரம் அதளபாதாளத்தை நோக்கிச் சென்றபோது, பிராங்க்ளின் டி. ரூஸ்வெல்ட் ஆட்சியைக் கைப்பற்றினார். அமெரிக்க பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக ஜோன் மேனார்ட் கெயின்ஸ் என்னும் இங்கிலாந்துப் பொருளியல் மேதையின் ஆலோசனையைப் பெற்று, அதில் வெற்றியும் கண்டிருந்தார்.

அப்படியொரு பக்கபலத்தைத்தான் பொருளியல் விற்பன்னர் எரான் விக்கிரமரத்னவிடமிருந்தும் சஜித் பிரேமதாஸ பெற்றுக்கொண்டிருக்கிறார். தூரநோக்குடைய பொருளாதார அபிவிருத்தித் திட்டங்களைத் தன்வசம் வைத்திருக்கும் ஐக்கிய மக்கள் சக்தி, அதனை எவ்வாறு மக்கள் மயப்படுத்தப்போகின்றது என்பதில்தான் சிக்கல்கள் இருக்கின்றன. நிலைமை இவ்வாறிருக்கையில் - வேலை வாய்ப்பின்மை, பொருளாதார மேம்பாட்டுக்கான முதலீடுகள் இல்லாமை, உற்பத்திகளுக்கான சந்தை வாய்ப்பின்மை போன்ற பல்வேறு காரணங்களால், இலங்கையின் எதிர்காலம் தொடர்ந்தும் கேள்விக்குறியாகிக் கொண்டிருக்கிறது. நலத்திட்டங்களை எவர் செயற்படுத்தினும், அது நம் எதிர்காலமாகும். இத்தகைய நிலையில், கட்சி பேதங்களை மறந்து, இலங்கையில் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கான ஒத்துழைப்புகளை அனைவரும் வழங்க முன்வரவேண்டும்.

தமிழ்Mirror
NO 8. HUNUPITIYA CROSS ROAD,
COLOMBO 2. P.O. BOX 1136
EDITORIAL:
TEL: 011 2 479 372-6,
011 2 479 479 (EX.375)
FAX: 011 2 304 114
MARKETING MANAGER
(DIR.) 011 2 479 822,
077 3421 476
CIRCULATION MANAGER
(DIR.) 2 479 672, 077 3 219 775,
SUBSCRIPTION MANAGER
(DIR.) 2 479 626, 2 479 628,
077 3 502 183
E-MAIL: tamilmirror@wijeya.lk









## வாழ்வியல் தரிசனம்

அன்பின் வலுவையும் அதன் பரிமாணத்தையும் எவராலும் விவரிக்க முடியாதது. அன்பு சுரக்கும் ஓர் உள்ளத்தில், அன்பின் விளைச்சல், தொடர்ந்தும் வியாபித்த வண்ணமே இருக்கும்.

தனி ஒருவரூடாகப் பிரவாகிக்கும் அன்பின் பரவல்கள், பலரின் இதயங்களை வாசம் செய்ய ஆரம்பித்து விடுகின்றது. இது ஓர் ஆனந்தப் பெருநிலை. இந்த அன்பு, புவனத்தைப் புதிதாவும் புனிதமாகவும் மாற்றும் தன்மைகொண்டது.

எதையும் எதிர்பாராது, வாரி வழங்கும் தன்மை அன்புக்கு மட்டுமே உரித்தானதாகும். ஆறுதலும் சலனமற்ற தெளிந்த தன்மையுமே, இதன் இயல்பும் குறிக்கோளும் ஆகும். அன்பு, மதம், இனம், மொழிகளுக்கு அப்பாற்பட்டது. குரோதங்களையும் பேதங்களையும் சுட்டெரிக்கும் சாகசம் கொண்டது.

அன்பின் நிமித்தம், இதயச் சிறையில் வைத்தல் எனும் வார்த்தையைக் காதலர்கள் அடிக்கடி பகர்வதுண்டு. ஆனால், அன்பினால் விளைந்த பரந்த உள்ளம், எல்லை கடந்த பெரு நதி. இங்கு எல்லோரும் வந்து பயன் பெறலாம்.

அன்பு, பெரு நெருப்பைக் குளிரூட்டும் தன்மை கொண்டது. இடி, முழக்கத்தைக் கூட, சிந்தையைக் கவரும், நல் இசையாக்கும். நெஞ்சுக்குள் பாயும் ஞான வஸ்து அன்பைத் தவிர வேறு ஏது?

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### மணல் ஏற்றிய டிப்பர்கள் பகல் நேரத்தில் பயணிப்பதை தடை செய்யவும்

வடக்கு மாகாணத்தில், கனரக வாகனங்களின் போக்குவரத்துக்கு, பகல் வேளைகளில் அனுமதி வழங்கக் கூடாது என்று பொதுமக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

வடக்கில் இடம்பெறும் வீதி விபத்துகளுக்கான முக்கிய காரணம், கனரக வாகனங்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளது. குறிப்பாக, டிப்பர் வாகனப் போக்குவரத்தால் பெருமளவான விபத்துகள் இடம்பெறுகின்றன. அதுவும் சனநடமாட்டம் அதிகமுள்ள நேரங்களிலும் இடங்களிலும் கனரக வாகனங்கள், குறிப்பாக டிப்பர் வாகனங்கள் வீதிஒழுங்குகள் எவற்றையும் கவனத்தில் எடுக்காமல், மிக வேகமாகப் பயணிப்பதால், அநேக விபத்துகள் இடம்பெறுவதற்குக் காரணமாகி விடுகின்றன.

கால்நடையாகவோ, சைக்கிளிலோ மோட்டார் சைக்கிளிலோ செல்லும் பல அப்பாவி மக்கள் உயிரிழந்துள்ளார்கள். அல்லது அங்கவீனமாகி, தமது எதிர்காலத்தையே தொலைத்துவிட்ட நிலைமையில் உள்ளார்கள். கூடுதல் விபத்துகள், மணல் கொண்டு செல்லும் டிப்பர்களாலேயே நிகழ்கின்றன. இதற்குக் காரணம், மணல் அகழ்வுக்கான கட்டுப்பாடுகளை அரசு தளர்த்திய நிலையில், சட்டத்துக்குப் புறம்பான மணல் கடத்தல்கள் பகல் வேளையில் இடம்பெறுகின்றன.

கனரக வாகனங்கள், வீதிகளில் பயணிக்க இரவு வேளையில் மட்டுமே முன்னர் அனுமதிக்கப்பட்டிருந்தது. இந்த நடைமுறையை மீளவும் அமல்ப்படுத்துவதால் பொதுமக்களின் நடமாட்டமற்ற இரவு வேளைகளில் விபத்துகளைக் குறைக்க முடியும்.

எனவே, இதுதொடர்பாகத் தகுதி வாய்ந்த அதிகாரிகள், மக்களின் உயிர்ப்பாதுகாப்புக்கு ஏற்றவகையிலான முடிவுகளை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

–ஜெ. பாலகிருஷ்ணன்

## இழந்தவைகள் இழந்தவைகளாகட்டும்

# இருப்பவைகளையாவது பாதுகாப்போம்

**காரை துர்க்கா**

தற்போது மக்கள், கொரோனா வைரஸுடன் வாழப் பழகி விட்டார்கள். இது கூட, உலக நியதியே ஆகும். கொரோனா வைரஸின் இரண்டாவது அலை தாக்கலாம் என, ஆபத்துக்குள் வாழ்ந்தாலும் வழமையான நிலையில், வாழ்வதாகவே கணிசமான மக்கள் உணர்கின்றார்கள்.

ஆபத்துக்குள் வாழ்தல் என்பது, வடக்கு, கிழக்கு வாழ் மக்களைப் பொறுத்த வரையில், புதிய விடயம் அல்ல. யுத்த காலத்தில் ஆள் அடையாள அட்டையை, சட்டைப் பையில் கொண்டு திரிந்தார்கள்; இன்று முகக்கவசத்தை முகத்தில் அணிந்து திரிகின்றார்கள்.

ஆனாலும், உயிருக்கு அச்சுறுத்தல் விளைவிக்கக் கூடிய கொரோனா வைரஸைக் காட்டிலும் உயிர் வாழ்வதற்குத் தேவையான (அரசியல்) தேர்தல் கதைகளை, சமூக வலைத்தளங்களிலும் நேரடியாகவும் மக்கள் அதிகம் பகிர்ந்து கொள்கின்றார்கள்.

அவ்வகையில், நீண்ட காலத்துக்குப் பின்னர், மங்கலகரமாக நடைபெற்ற நிகழ்வில் (பூப்புனித நீராட்டு விழா) மக்கள் கூட்டத்துடன் இருந்த போது, சுவாரஸ்யமான பல அரசியல் உரையாடல்கள் நடந்தன. சுவாரஸ்யங்கள் என்றாலும், அர்த்தங்கள் பொதிந்தவையாக அவை காணப்பட்டன.

"நாடாளுமன்றத் தேர்தல் வரப்போகுது, யாருக்கு வாக்களிப்பதென்று தெரியாதபடி சனங்கள் குழம்பிப் போய் உள்ளனர்; அப்படி எங்கட சனத்தை இவங்கள் குழப்பிப் போட்டாங்கள்" என ஒருவர் கூறினார்.

"இதில் என்ன குழப்பம் இருக்கு? ஏன், நாங்களும் குழம்பி, மற்றவர்களையும் குழப்ப வேண்டும். நாங்கள், ஓரணியாகக் கூட்டமைப்புக்குத்தான் வாக்களிக்க வேண்டும்" என மற்றையவர் கூறினார்.

"நாங்கள் இவ்வளவு காலமும் இவைக்கு (கூட்டமைப்பு) வாக்களித்து, என்னத்தைக் கண்டனாங்கள்" என்றார் இன்னொருவர்.

அந்த மற்றையவர் தொடர்ந்தார், "அவருக்கு வாக்களித்தோம், இவருக்கு வாக்களித்தோம் என நாங்கள் யாருக்கு வாக்களித்தாலும் இதுவேதான் எங்கள் நிலைவரம்; இதனை அனைவரும் தெளிவாக உணர்ந்து கொள்ள வேண்டும். ஆனால், நான், கூட்டமைப்புக்கு வாக்களிக்கச் சொன்னபடியால், கூட்டமைப்பின் ஆதரவாளர் அல்ல; அவர்கள் செய்தது எல்லாம் சரி எனச் சொல்லவும் வரல்லை. ஆனால், நாங்கள் (தமிழர்கள்) ஓர் அணியாகச் செயற்படுவதற்காக மட்டுமே, அவர்களுக்கு வாக்களிக்கச் சொல்கின்றேன்" என்றார் .

இவர்களின் உரையாடலில் இருந்து, (ஒருபானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பதுபோல்) தமிழ் மக்கள் இன்னும், மிகத் தெளிவாக இருக்கின்றார்கள். மக்களை வழி நடத்த வேண்டிய அரசியல்வாதிகளே, அவர்களை குழப்புகின்றார்கள். தமிழ் மக்கள், தாங்கள் உதிரிகளாக உதிர்ந்து போக விரும்பவில்லை என்பதை உணரக்கூடியதாக இருந்தது.

வடக்கு, கிழக்கில் பல தமிழ் அரசியல் கட்சிகள் போட்டியிட்டு ஒவ்வொன்றும் நான்கு, மூன்று, இரண்டு, ஒன்று என, நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றால், அரசாங்கம் யாருடன் பேச்சுவார்த்தைக்கு வரும். அரசாங்கம் பேச்சுவார்த்தையைத் தவிர்ப்பதற்கு, நாமே வழி ஏற்படுத்திக் கொடுத்ததாக அமையலாம்.

பலமான ஓர் அணியாகச் செயற்படுதல் ஊடாகவே, பேரினவாத அரசாங்கத்தை, பேச்சு மேடைக்கேனும் கொண்டு வரலாம் என்பதில், எம்மக்கள் தெளிவாகவும் உறுதியாகவும் விருப்பமாகவும் உள்ளனர்.

இதற்கு மேலதிகமாகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு (வீடு) என்ற ஒற்றைச் சொல்லுக்கும் ஒற்றுமையாகச் செயற்பட வேண்டும் என்ற செயலுக்கும் மதிப்பளித்தே, இதுவரை காலமும் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களித்து வந்துள்ளார்களே தவிர, அதில் இருக்கும் தனி மனித பிரபல்யங்களையோ, அவர்களது திறமைகளையோ ஒருபோதும் கண்டு கொள்ளவில்லை என்பதைக் கூட்டமைப்புத் தலைவர்கள் நன்கு அறிந்து கொள்ள வேண்டும்.

ஏன், தேர்தல் வாக்களிப்புகளின் போது கூட, பலர் விருப்பு வாக்கு எண்ணுக்கு வாக்களிக்காது, தாங்கள் விரும்புகின்ற வீட்டுக்கு மட்டுமே வாக்களித்து வருகின்ற தன்மையும் கூடக் காணப்படுகின்றது.

இதைவிட, கடந்த காலங்களில் கூட்டமைப்பின் ஊடாக மாகாண சபை, நாடாளுமன்ற உறுப்பினர்களாகவும் முதலமைச்சராகவும் பதவி வகித்து, கூட்டமைப்புடன் முரண்பட்டு அதிலிருந்து வெளியேறியவர்கள், தங்களுக்குள் ஒற்றுமையாக, ஓரணியாகச் செயற்பட முடியாது, மேலும் முரண்படுகின்றமை கூட, கூட்டமைப்பு தனது பலத்தை முழுமையாக இழக்காது இருப்பதற்கான பிறிதொரு காரணமாகவும் அமைகின்றது.

இதுவே மாற்று அணி தோற்றமும் எழுச்சியும் பெற முடியாமைக்கான பிரதான காரணமாகவும் அமைகின்றது. மேலும், இவ்வாறாக மாற்று அணியாகத் தொழிற்பட முனைந்தவர்களது எல்லைகள், யாழ். மாவட்டத்துக்குள் மட்டுமே சுருங்கி விட்டமை போன்ற நிலைமைகளும் காணப்படுகின்றன.

ஆகவே, சுருங்கக்கூறின் ஆயுதப் போராட்டத்தின் மௌனத்துக்குப் பின்னரான காலங்களில் (2009) கூட்டமைப்பு தமிழ் மக்களின் நாடித் துடிப்புக்கு எற்ற மாதிரி இயங்கவில்லை; இயங்க முடியவில்லை. கூட்டமைப்புக்கான மாற்று அணி என வெளிக்கிட்டவர்கள், கூட்டமைப்புக்கு எதிரான மனநிலையில் இயங்கினரே தவிர, தமிழ் மக்களது மனநிலையைப் புரிந்து, ஆகக்குறைந்து ஒன்றுபட்டுக் கூட இயங்கவில்லை; இயங்க முடியவில்லை.

'எவரொருவர் எதுவும் சாதிக்கப் போவதில்லையோ, அவர் தியாகம் செய்யத் தேவை இல்லை. சாதிக்கப் போகின்றவர்கள், கட்டாயம் நிறையத் தியாகம் செய்ய வேண்டும். யார் அதிக உயரத்தை எட்டப் போகிறார்களோ, அவர்கள் அளப்பரிய தியாகங்களைச் செய்ய வேண்டியது அத்தியாவசியமாகின்றது' என்ற ஜேம்ஸ் அலனின் கூற்று இவ்விடத்தில் பொருத்தமாகும்.

ஆகவே,தமிழ் மக்களுக்காகச் சாதிக்கப் போகின்றோம் என அரசியலுக்கு வந்தவர்கள், தியாகம் செய்யத் தயாராக இருக்க வேண்டும். அதேவேளை, உன்னதமான தியாகங்களுக்கூடாகப் பயணித்த விடுதலைப் போராட்டத்தை, நடுத்தெருவில் விட முடியாது. ஆனால், நாங்கள் சிறுபிள்ளைத்தனமாகச் சண்டை போடுகின்றோம்; விரிசல்களை விரிவாக்குகின்றோம்.

சுமந்திரன் செய்தவை, சொல்லியவை பற்றி பட்டிமன்றம் போடுகின்றோம். சரி, சுமந்திரன் செய்தவை, சொல்லியவை தொடர்பில் குழப்பம் இருந்தால், அவருக்கு விருப்பு வாக்குப் போடுவதைத் தவிர்க்கலாம் தானே. அதற்கு ஏன் எங்களது நேரத்தையும் சக்தியையும் வீணடிக்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி, சுமந்திரன் மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனக் கவலைப்படும் எம்மக்கள், அடுத்த மாதம் ஐந்தாம் திகதி நடவடிக்கை எடுக்க வேண்டியது தானே? அதற்கான ஆயுதமும் (யாழ்ப்பாணம், கிளிநொச்சி) வாக்காளர்களது கைகளில் உள்ளது தானே?

ஒரு விடயத்தை மட்டும், அனைவரும் தயவு கூர்ந்து உணர்வுபூர்வமாக விளங்கிக் கொள்ள வேண்டும். தமிழ் மக்கள் ஒற்றுமையாக, ஒரு கட்சிக்கு மட்டும் வாக்களித்தால் மட்டுமே, கிழக்கு மாகாணத்தில் ஐந்து (சில வேளைகளில் ஆறு) ஆசனங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கடந்த முறை (2015) ஐந்து ஆசனங்கள் கிடைத்தன.

திருகோணமலை ஒன்று, மட்டக்களப்பு மூன்று அல்லது நான்கு, அம்பாறை ஒன்று என ஆசனங்கள் கிடைக்கப் பெறும். இந்நிலையில், தமிழ் வாக்குகளின் சிதைவு, ஏனைய இனங்கள் கூடுதல் ஆசனங்களைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளை அதிகரிக்கும்.

இது போலவே, வன்னித் தொகுதியிலும் நிலைமைகள் உள்ளன. கூட்டமைப்பு, கடந்த பொதுத் தேர்தலில் யாழ்ப்பாணத் தேர்தல் தொகுதியில், வெறும் ஏழு வாக்குகளால் ஆறாவது ஆசனத்தை இழந்தது.

இந்நிலையில், 2001ஆம் ஆண்டு காலப் பகுதிகளில், பல தமிழ்க் கட்சிகள் இருந்தாலும், தமிழ் மக்களது விடுதலைக்கான ஆயுதப் போராட்டத்துக்குச் சமாந்தரமாக, தமிழ் மக்களது ஜனநாயகப் போராட்டம் பயணிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கத்துடன் 20.10.2001 ஆம் திகதி கூட்டமைப்பு உருவாக்கப்பட்டது.

அன்று கூட்டமைப்பில் ஐந்து கட்சிகள் அங்கம் வகித்தன. 2010ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலோடு, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸும் 2015ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலோடு ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியும் (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஆகிய கட்சிகள் விலகின.

இன்று, சிங்கள பௌத்த பேரினவாதம் பேரெழுச்சி கொண்டு நிற்கின்றது. திருக்கோணேஸ்வரம், நல்லூர் முருகன் கோவில்கள் எல்லாவற்றுக்கும் தமிழர்கள் வரலாம், கும்பிடலாம்; ஆனால், அவை எங்களுடையவை என உரிமை கேட்டு விட்டது. நாளை தமிழர்களின் வீட்டு சுவாமி அறையில் இருக்கும் பிள்ளையாரும் பறிபோகலாம்.

ஆகவே, எதிர்வரும் காலங்களில் மேலும் ஆபத்துகள் வரவுள்ளன. அழுதாலும் அவள் தானே பிள்ளை பெற வேண்டும் என்பது போல, ஆபத்துகள் எதுவானாலும் அதைத் தாங்குவதற்குப் பலம் வேண்டும்.

சர்வதேசம் வரும் வரும் என, வராத சர்வதேசத்துக்குக் காத்திருக்க முடியாது. அரசமைப்பு வரும் வரும் என எக்காலமும் வராத யாப்புக்குக் காத்திருக்க முடியாது. இழந்த இருப்புகள் போக, மீதியாக உள்ளவற்றைப் பாதுகாக்க, தமிழர்கள் ஓரணியாகத் திரள்வதே இப்போது எம்முன் உள்ள ஒரே தெரிவு.

அதற்காக வடக்கு, கிழக்கில் தனித்தவமானதும் பலமானதுமான கட்சி ஒன்றை வெல்ல வைப்பதே, அதற்கான பாதை எனலாம். வேறு ஏதேனும் உண்டா?

தமிழர்களுக்கு வாக்களிப்பதன் அவசியத்தை

# உணர்த்தும் தேர்தல்




க. அகரன்

கொரோனா வைரஸ் தொற்று, மீண்டும் அபாயத்தை ஏற்படுத்தும் நிலையில், நாடாளுமன்றத் தேர்தலை நடத்திவிட வேண்டும் என, இலங்கை அரசாங்கம் கங்கணம் கட்டி நிற்கும் சூழலில், தேர்தல் எவ்வாறாயினும் நடந்துவிடக்கூடிய நிலையே, இப்பத்தி எழுதிக்கொண்டிருக்கும் பொழுதுவரையில் காணப்படுகின்றது.

தபால் மூலமான வாக்களிப்பு இடம்பெற்று வரும் நிலையில், இராஜாங்கனையில் தபால் மூல வாக்களிப்புக்கான திகதி பிற்போடப்பட்டுள்ளதாகத் தேர்தல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதற்குமப்பால், மருத்துவர் சங்கத்தின் அறிவுரைகளையும் மீறிப் பாடசாலைகளைத் திறந்து, மாணவர்கள் மத்தியில் தொற்றை ஏற்படுத்தி, மீண்டும் பாடசாலைகளை மூடும் துர்ப்பாக்கிய நிலைக்கு அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

இந்நிலையில், எதிர்வரும் நாள்களில் இலங்கையில் காணப்படப்போகும் கொரோனா வைரஸ் தொற்றின் வேகத்தையும் அதன் தாக்கத்தையும் பொறுத்தே, தேர்தலும் தீர்மானிக்கப்படப் போகின்றது என்பதே உண்மை.

எனினும், இலங்கை அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், தமக்கான அலையொன்று இருக்கும் போது, இந்தத் தேர்தலை நடத்திவிட வேண்டும் என்ற அவாவில் உள்ளனர். இதற்காக அவர்கள், எந்த விலையையும் கொடுக்கத் தயாராக இருந்த நிலையில், தற்போது கொரோனா வைரஸோடு போட்டி போடுவார்களா, இல்லையேல் தேர்தல் பிற்போடப்படுமா என்ற கேள்விக்கு மத்தியில், தேர்தல் களமும் சூடுபிடித்துள்ளது.

தமிழர் பிரதேசங்கள் எங்கும் தேர்தல் பிரசாரங்கள் வழமைக்கு மாறாக, ஒருவரை ஒருவர் நேரடியாக கூட்டிக்காட்டி பிரசாரம் செய்வதும், தமது கட்சிக்குள்ளேயே சக வேட்பாளரைத் தாக்கிப்பேசுவதும் என, அநாகரிக பிரசார யுக்திகள் கையாளப்பட்டு வருகின்றன.

விருப்பு வாக்குமுறைத் தேர்தல் என்பதால், மக்கள் பிரதிநிதியாகுவது யார் எனப் போட்டி காணப்பட்டாலும், தற்போதைய பிரசார யுக்தி, அதி பயங்கரமானது என்பதை மறுப்பதற்கில்லை. இந்நிலையில், யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் முக்கியமான உறுப்பினர்கள், சகவேட்பாளர்கள் சிலரே, தமது கட்சியின் ஒரு சில வேட்பாளர்களை, மக்கள் மத்தியில் இருந்து துடைத்தெறிந்துவிட வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கின்றனர்.

இதன் ஒரு வெளிப்பாடாகவே, தமிழரசுக் கட்சியின் யாழ். மாவட்ட மகளிர் அணியின் செயலாளரான விமலேஸ்வரியின் கருத்துகள் அண்மைய நாள்களாகப் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன. அதாவது, தமிழரசுக் கட்சிக்கு, கனடா ஆதரவாளர்களால் வழங்கப்பட்ட சுமார் 21 கோடி ரூபாய் நிதிக்கு என்ன நடந்தது என்ற கேள்வியாகும்.

வடக்கு, கிழக்கில் தேர்தல் களத்தில் உள்ள சுயேச்சைகள் முதற்கொண்டு, அரசியல் கட்சிகள் அனைத்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பை, எந்த அளவுக்கு மக்கள் மத்தியில் வெறுப்புணர்வை ஏற்படுத்தக் கூடியதாகப் பிரசாரம் செய்து வருகின்றனரோ, அதற்கும் மேலாக அக்கட்சியின் மகளிர் அணியின் செயலாளரின் கருத்து, பாரதுரமானதாக அமைந்துள்ளது.

விமலேஸ்வரி யார் என்ற கேள்வி எழலாம். இளைஞர் சேவைகள் மன்றத்தின், வவுனியா பிராந்திய உதவிப் பணிப்பாளராக இருந்து, பின்னர் மாகாணப் பணிப்பாளராகக் கடமையாற்றிய ஆளுமை மிக்க பெண். அரசியலானாலும் சரி, சமூக விடயங்களானாலும் சரி துணிந்து கருத்துகளை முன்வைக்கும் பெண் என்ற கருத்துள்ளது. எனினும், இவர் கடந்த காலங்களில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில், வன்னித் தேர்தல் தொகுதியில் போட்டியிட்ட கீதாஞ்சலியுடன் நெருங்கிய தொடர்புடையவர் என்பதற்கப்பால், தேர்தல் பிரசாரங்களிலும் பங்குகொண்ட சம்பவங்களும் உள்ளன.

அதற்குமப்பால், நாமல் ராஜபக்ஷவால் இளைஞர் சேவைகள் மன்றத்தின் மூலம் ஆரம்பிக்கப்பட்ட நீலப் படையணியின் செயற்பாடுகளிலும் பணியில் இருந்து ஓய்வுபெற்றதன் பின்னரும் கூட, நெருங்கிச் செயற்பட்டிருக்கின்றார். இவ்வாறான நிலையில்,


செல்வம் அடைக்கலநாதன்


எஸ். விநோநோகராதலிங்கம்


செ. மயூரன்

விமலேஸ்வரியின் கருத்துகள் எந்தப் பின்புலத்தில் இருந்து, தேர்தல் காலத்தில் வெளிப்படுத்தப்பட்டன என்ற சந்தேகம் எழுவது யதார்த்தமே.

தனி ஒரு வேட்பாளராக சுமந்திரனைத் தாக்குவதாக நினைத்து, அவர் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பு, இன்று தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் எனத் தம்மை அடையாளப்படுத்திய தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கே பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஏனெனில், தமிழ்த் தேசிய கூட்டமைப்புக்கு எனப் புலம்பெயர் தேசத்தில் இருந்து வரும் நிதிகளுக்கு, என்ன நடக்கின்றது என்ற கேள்வி, அவர்களின் பங்காளிக் கட்சிகளுக்கு எழாவிட்டாலும் அல்லது, தமிழரசுக் கட்சியிடம் கேட்க வேண்டும் எனத் தோன்றாது விட்டாலும் கூட, தமிழ் மக்கள் மத்தியில் இந்த நிதி தொடர்பான சந்தேகம் காணப்பட்டிருந்தது.

ஏனெனில், புலம்பெயர் தேசத்தில் இருந்து, கூட்டமைப்புக்கான நிதி அனுசரணை, அதிகளவில் உள்ளதாகக் கருத்து நிலவிவரும் நிலையிலேயே, விமலேஸ்வரியின் கருத்து, புரளியைக் கிளப்பிவிட்டுள்ளது.

இதுபோன்று, வன்னித் தேர்தல் தொகுதியிலும் தமிழ் மக்களின் இருப்பு என்பது கேள்விக்கு உட்படுத்தப்படும் வகையிலான சிங்களக் குடியேற்றங்கள் இடம்பெற்று வரும் நிலையில், பல சுயேச்சைகளும் அரசியல் கட்சிகளும் களத்தில் உள்ளன.

ஆறு ஆசனங்களைக் கொண்ட வன்னித் தேர்தல் தொகுதியில், 405 வேட்பாளர்கள் களத்தில் உள்ளனர். எனவே, வாக்குச் சிதறல் என்பது, அதிகமாகவே இடம்பெறும் எனக் கணிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு தக்க வைத்துக்கொள்ளப்போகின்றனர் என்ற ஐயப்பாடு காணப்படுகின்றது.

வன்னி நிலப்பரப்போடு எவ்வித தொடர்புமற்ற பல சிங்கள வேட்பாளர்கள், பொதுஜன பெரமுனவுடன் களமிறங்கி உள்ளனர். அதற்குமப்பால் பாரிய நிதி வளத்துடன் சுயேட்சையாகவும் தென்பகுதியில் இருந்து சிங்கள வர்த்தகரொருவர் களமிறங்கி உள்ளார். இவர்களுடன் தமிழ்ப் பிரதிநிதிகளும் வேட்பாளர்களாகக் களத்தில் உள்ளதுடன், தமிழ் மக்கள் சிலரும் இவ்வாறான வேட்பாளர்களுக்காக வாக்குப் பெறும் பிரசாரத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், கடந்த மூன்று நாடாளுமன்றத் தேர்தலில் சிங்களப் பிரதிநிதித்துவம் இன்றிக் காணப்பட்ட வன்னித் தேர்தல் தொகுதியில், இம்முறை ஒருவரையாவது கொண்டு வந்துவிட வேண்டும் எனச் சிங்கள மக்கள் மட்டுமன்றி அரசாங்கமும் எண்ணியுள்ளது.

இது வன்னித் தேர்தல் மாவட்டத்தை உள்ளடக்கிய வவுனியா, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய நிர்வாக மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசங்களில் சிங்களக் குடியேற்றங்களை மேற்கொள்வதற்கு இலகுவாக அமையும் எனக் கரிசனை கொண்டுள்ளனர்.

ஆகவே, இவ்வாறான தேர்தல் சூழலில், வன்னித் தேர்தல் மாவட்டம், பாரிய இனப்பரம்பலை மாற்றியமைக்கும் களமாக மாறப்போவதைத் தமிழர்கள் உணரத்தலைப்பட வேண்டும்.

இச் சூழலிலேயே, பிரதான தமிழ்க் கட்சிகளின் வாக்குகளை உடைத்து, தமிழ் பிரதிநிதித்துவத்தை இல்லாதொழிக்கும் செயற்பாட்டில், பல தமிழர்களும் புதிய புதிய பெயர்களைக் கொண்ட கட்சிகளில் அறிமுகமாகிப் போட்டியிடுகின்றனர்.

கடந்த காலங்களில், சுதந்திரக் கட்சியிலும் பொதுஜன பெரமுனவிலும் போட்டியிட்ட பல தமிழ் வேட்பாளர்கள், தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்று வீணடித்த நிலையில், தற்போது தம்மைத் தமிழர்கள், தமிழர்களின் கட்சி என்ற கோசத்துடன், வன்னித் தேர்தல் தொகுதியில் களமிறங்கி உள்ளமையானது, தமிழ் மக்களின் வாக்குகளை மீண்டும் வீணடிப்பதற்கேயன்றி, பிரதிநிதித்துவத்தை உருவாக்குவதற்காக இல்லை என்பதே யதார்த்தம் ஆகும்.

இதற்குமப்பால், தமிழ் அரசியல் களத்தில் வாக்குச் சிதறல் என்பது, தவிர்க்க முடியாத நிலையில், தமக்கான பிரதிநிதித்துவத்தை ஆளுமையுள்ளதாகவும் அறிவார்த்தமாகவும் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தைத் தவறவிடும் வாய்ப்புகள் உள்ளன.

கடந்த காலங்களில், தமிழ்க் கட்சிகளின் ஒற்றுமையை வலியுறுத்தியபோதிலும் அது சாத்தியப்படாத நிலையில், இன்று பல கட்சிகளாகத் தேர்தலை முகம் கொடுத்துள்ள தமிழர்கள், தற்போது தமது வாக்குச் சிதறல்களால் தமது பிரதிநிதித்துவத்தையும் இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமை பெரும் துயரமே.

இதற்குமப்பால் தற்போது ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சுறுத்தல் காரணமாக, வாக்களிப்பு சதவீதம் குறைந்து செல்லும் என அவதானிக்கப்பட்டுள்ள நிலையில், வாக்களிப்பில் இருந்து தமிழ் வாக்காளர்கள் விலகுவதானது, ஆரோக்கியமற்ற செயற்பாடாக இருக்கும் என்பதை உணரத்தலைப்பட வேண்டும்.

ஆகவே, தமிழ் வேட்பாளர்களைப் பொறுத்தவரையில், தமது தேர்தல் பிரசாரப் பணியில், முக்கிய பங்காக மக்களை வாக்களிப்புச் செய்யத் தூண்டுவது முக்கியமானதாக உள்ளது. அதிகளவான வாக்களிப்பு இடம்பெறுமாயின் பிரதிநிதித்துவ இழப்பைத் தவிர்ப்பதற்கு வழிவகுக்கும் என்பதும் மறுப்பதற்கில்லை. எனவே, தமிழ் மக்கள், தமது வாக்களிப்பு சதவீதத்தைத் தமது தொகுதிகளில் அதிகரிப்பதனூடாகவே தமக்கான சிறந்த பிரதிநிதித்துவத்தைப் பெற வாய்ப்பாக அமையும்.

இவ்வாறான நிலையில், யாழ். மாவட்டத்தில் எவ்வாறு உட்கட்சி மோதல்களுக்கு மத்தியில் தேர்தல் பிரசாரம் சூடுபிடித்துள்ளதோ, அதேபோன்றே வன்னித் தேர்தல் தொகுதியிலும் உட்கட்சி வெட்டுப்பாடுகள் அதிகரித்துள்ளன.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பில், டெலோவால் இளம் வேட்பாளராகக் களமிறக்கப்பட்ட வேட்பாளரொருவர், அக் கட்சியால் ஓரங்கட்டப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது. வன்னித் தேர்தல் தொகுதியில், டெலோவுக்கு மூன்று ஆசனங்கள் கூட்டமைப்புக்குள் ஒதுக்கப்பட்ட நிலையில், கட்சியின் தலைவரான செல்வம் அடைக்கலநாதன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், முன்னாள் மாகாணசபை உறுப்பினர் செ. மயூரன் ஆகியோர் களமிறங்கியுள்ளனர்.

இதில், மயூரன் இளம் வேட்பாளராக உள்ள போதிலும், அக்கட்சியின் பிரசாரங்களில் அவர் ஒதுக்கப்பட்டுள்ளதாகக் குற்றச்சாட்டுகள் காணப்படும் நிலையில், அக்கட்சியினர், “விருப்பு வாக்குத் தேர்தல் முறையில், அவ்வாறுதான் இருக்கும்” எனத் தெரிவித்து வருகின்றனர்.

எனவே, தமது கட்சிக்குள்ளேயே ஒருவரை ஒருவர் வீழ்த்திப் போட்டியிடும் இந்தத் தேர்தல் முறைக்குள், தமிழ்ப் பிரதிநிதித்துவத்தை எவ்வாறு காப்பது என்ற கேள்வியும் அதிகமாகவே காணப்படுகின்றது.

எனவே, வாக்காளர்கள் தீர்க்கமானதும் திடமானதுமான முடிவை எடுக்கும் பட்சத்திலேயே, இம்முறை தமிழ் மக்கள் தமது இருப்பைத் திடமாக வைத்துக்கொள்ள வழிவகை செய்ய முடியும் என்பது மறுப்பதற்கில்லை.

## தமிழ்க் கட்சிகள் என்ற முகமூடியுடன் போலிகள்


வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம்

கடந்த காலங்களில், பெரமுனவின் பங்காளிகளாகத் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறமுடியாதவர்கள், தற்போது தாம் தனித் தமிழ்க் கட்சி என்ற போலி முகமூடியைப் போட்டு, மக்களிடம் வாக்குக் கேட்கிறார்கள் என, வன்னி மாவட்ட இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வேட்பாளர் வைத்திய கலாநிதி ப. சத்தியலிங்கம் தெரிவித்தார்.

**“ கடந்த காலங்களிலே எங்களுடைய மக்கள், அரசாங்கக் கட்சிக்களுக்குக் கணிசமான வாக்குகளைக் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் தமிழ்க் கட்சி என்ற முகமூடியோடு, இப்போது வந்து மக்கள் முன் நிற்கிறார்கள். அவர்களுக்குத் தெரியும் தங்களுக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்காது என்று....**

வன்னித் தேர்தல் தொகுதி என்பது, ஒரு முக்கியமான தொகுதி என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். கடந்த காலங்களில், வெற்றிலைச் சின்னத்திலும் வெவ்வேறு சின்னங்களிலும் போட்டியிட்டவர்கள், தற்போது தாங்கள் தமிழர்கள்; நாங்கள் தமிழ் கட்சியிலேயே போட்டியிடுகின்றோம்; எங்களுடைய வேட்பாளர்களும் தமிழர்தான் என்கின்ற பிரசாரத்தை முன்னெடுத்துத் தங்களைத் தமிழர்களாகக் காட்டி, எமக்கு வாக்களியுங்கள் என்று கேட்கிறார்கள். அப்படிக் கேட்பவர்கள், இந்தப் பொதுஜன பெரமுன என்று சொல்லப்படுகின்ற மொட்டுக் கட்சியினுடைய சகோதர சகோதரி வேட்பாளர்களாகவோ, அந்தக் கட்சிகள் பொதுஜன பெரமுனவினுடைய பங்காளிக் கட்சிகளாவோ அல்லது, கூட்டாளிக் கட்சிகளாகவோ இருப்பார்கள். இவர்கள், தமிழ்க் கட்சிகளில் தனித்துக் கேட்பதற்குக் காரணம், கடந்த காலங்களிலே எங்களுடைய மக்கள், அரசாங்கக் கட்சிக்களுக்குக் கணிசமான வாக்குகளைக் கொடுக்கவில்லை. ஆகவே, அவர்கள் தமிழ்க் கட்சி என்ற அந்த முகமூடியோடு, இப்போது வந்து மக்கள் முன் நிற்கிறார்கள்.

**“ சுயேட்சைகளாகவும் இதர கட்சிகளிலும் கேட்பவர்கள் 15,000 - 20,000 வாக்குகளைச் சிதறடிப்பார்களேயானால், நாங்கள் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை இழந்துவிடுவோம்**

அவர்களுக்குத் தெரியும் தங்களுக்கு ஓர் ஆசனம் கூடக் கிடைக்காது என்று. அவ்வாறு தெரிந்தும், ஏன் நிற்கிறார்கள் என்றால், தமிழ்ப் பிரதிநிதிகளைக் குறைப்பதற்காகவும் எங்களுடைய வாக்குகளைச் சிதறடிப்பதற்காகவும் ஆகும். இவ்வாறு சுயேட்சைக் குழுக்களிலும் இதர கட்சிகளிலும் கேட்பவர்கள் 15,000 தொடக்கம் 20,000 வாக்குகளைச் சிதறடிப்பார்களேயானால், நாங்கள் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை இழந்துவிடுவோம்.

வன்னித் தேர்தல் தொகுதி என்பது, இப்போது சிங்கள மக்களைக் கொண்டுவந்து குடியேற்றி, இனப்பரம்பலை மாற்றுகின்ற ஒரு பிரதேசமாக, அவதானிக்கப்பட்டு வருக்கின்றது. எனவே, நாம் சிந்தித்து வாக்களிக்க வேண்டும். கூட்டமைப்பைப் பலப்படுத்துவதன் ஊடாகவே, நாம் எமது இருப்பைப் பலப்படுத்திக்கொள்ள முடியும் என, அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தக் கருத்து எவ்வளவு தூரம் யதார்த்தமானது என்பது, இன்றைய அரசியல் போக்கில் உணரக்கூடியதாக இருக்கிறது.

# ‘டீல் அரசியல் இல்லை’

- அடையாள அட்டையில் யாவரும் இலங்கையர் என்ற அடையாளத்தை வழங்க வேண்டும்
- ஏனைய கட்சிகளுடன் டீல் மேற்கொண்டவர்கள் சஜித் பிரேமதாஸ பக்கம் ஓடினார்கள்
- ஐக்கிய தேசிய கட்சியின் பிரதித் தலைவர் பதவிக்கு சஜித் பிரேமதாஸ பொருத்தமற்றவர்
- ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மதிநுட்பத்தை, நாட்டு மக்கள் அறிவார்கள்



பாலித்த தெவரப்பெரும
ஐக்கிய தேசியக் கட்சி
சின்னம்: யானை
மாவட்டம்: களுத்துறை
இலக்கம்: 08



எஸ்.ஷிவானி

தமது கட்சிக்குள் எந்தவொரு நெருக்கடியும் இல்லை என்றும் அக்கட்சியிலிருந்து வெளியேறியோருக்கே, தற்போது நெருக்கடி ஏற்பட்டுள்ளதெனவும் தெரிவித்த ஐக்கிய தேசிய கட்சியின் களுத்துறை மாவட்ட வேட்பாளர் பாலித்த தெவரப்பெரும, தற்போதைய அரசாங்கத்துடன் எவ்வித டீலும் கிடையாதெனக் கூறினார்.

அத்துடன், அரசியல்வாதிகளும் நிறுவனத் தலைவர்களும், நாட்டு மக்களின் பிரச்சினைகளைத் தங்களது பிரச்சினைகளாகக் கருதிச் செயற்பட வேண்டுமெனத் தெரிவித்த அவர், மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய சிறந்த மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்யும் பொறுப்பு, மக்கள் கைகளிலேயே உள்ளதென்று, தமிழ்மிரர் பத்திரிகைக்கு அவர் வழங்கிய விசேட செவ்வியில் தெரிவித்தார்.

செவ்வியின் முழு விபரம் வருமாறு,

**கே: உங்களது அரசியல் பயணம் எங்கிருந்து ஆரம்பமானது?**

எனது தந்தை ஓர் இடதுசாரி. கல்வியியலாளர். அவரது அரசியல் வாழ்க்கை ஊடாகவே, நானும் அரசியலில் ஈடுபாடு கொள்ள ஆரம்பித்தேன். 2002ஆம் ஆண்டு, ஐக்கிய தேசிய கட்சி ஊடாக அரசியலுக்குப் பிரவேசித்தேன். மத்துகம பிரதேச சபைத் தேர்தலில் போட்டியிட்டு, மத்துகம பிரதேச சபைத் தவிசாளராகத் தெரிவானேன். என்னுடைய அண்ணன், ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியில் போட்டியிட்டு, எதிர்க்கட்சித் தலைவரானார். 2004ஆம் ஆண்டில் மாகாண சபைக்குத் தெரிவான நான், தொடர்ச்சியாக மூன்று தடவைகள் மாகாண அமைச்சராகப் பதவி வகித்துள்ளேன். பின்னர், நாடாளுமன்றத்துக்குத் தெரிவாகி, மூன்று முறை பிரதி அமைச்சராகச் செயற்பட்டுள்ளேன்.

**கே: அமைச்சராக நீங்கள் பதவி வகித்த காலப்பகுதியில் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் எவை?**

கலாசார அலுவல்கள் பிரதி அமைச்சராக இருந்தபோது, களுத்துறை மாவட்டத்தில் 5 கலாசார மத்திய நிலையங்களை அமைத்துள்ளேன். அத்துடன், தேசிய அடையாள அட்டை பிறப்புச் சான்றிதழ்களைப் பெறும் வசதியை, மாவட்டத்துக்குள் ஏற்படுத்திக் கொடுத்தேன். அது மட்டுமல்லாது, கலாசார அமைச்சின் ஊடாகப் பல்வேறு வேலைத்திட்டங்களை மேற்கொண்டுள்ளேன்.

வனஜீவராசிகள் பிரதி அமைச்சராக இருந்த காலத்தில், நாட்டின் பல பாகங்களுக்குச் சென்று, மக்களின் பிரச்சினைகளை இனங்கண்டு, காட்டு யானைகளின் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்தேன்.

நான், சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சராக இருந்தபோது, அமைச்சர் தயா கமகே, எனக்கு அதிகாரங்களை வழங்கவில்லை. எனினும், மக்கள் பிரதிநிதியாக எதையும் செய்யாமலிருக்கக் கூடாது என்பதற்காக, நாடெங்கிலும் கண்காணிப்பு விஜயம் மேற்கொண்டு, குறைபாடுகளை அறிந்து அவற்றுக்கான தீர்வுகளை வழங்கினேன்.

**கே: நாட்டு மக்களின் தீர்க்கப்படாத பிரச்சினைகள் பல உள்ளன. அவற்றுக்கு நீங்கள் எவ்வாறான தீர்வுகளை முன்வைக்க விரும்புகிறீர்கள்?**

நாட்டில் சரியான கல்வி முறை இல்லை. கல்வி கற்கும் மாணவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு இல்லை. அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களின் பிள்ளைகளே, கல்வி கற்று நாட்டிலிருந்து வெளியேறுகின்றனர். சிறந்த சுகாதாரக் கொள்கைத் திட்டங்கள் அவசியம். சமத்துவம் வேண்டும். இன, மத வேறுபாடுகள் களையப்பட வேண்டும். நாட்டின் பொலிஸ் திணைக்களத்தை மாற்றியமைக்க வேண்டும். இளைஞர், யுவதிகளைச் சேவையில் இணைக்க வேண்டும். இலஞ்ச ஊழலற்ற சேவை இடம்பெற வழிவகுக்க வேண்டும்.

நாட்டில், தமிழ், சிங்களம், முஸ்லிம் என்ற வேறுபாட்டை இல்லாதொழித்து, தேசிய அடையாள அட்டையில் யாவரும் இலங்கையர் என்ற அடையாளத்தை வழங்க வேண்டும். வேறுபாடுகள் இன்றி, நாட்டு மக்கள் அனைவருக்கும் பொது வசதிகளைச் சமமாக வழங்க வேண்டும்.

நாட்டின் கைத்தொழிற்றுறையைக் கட்டியெழுப்ப வேண்டும். இலஞ்சம், ஊழல், துஷ்பிரயோகம் மற்றும் இனவாத, மதவாதச் செயற்பாடுகளுக்கு, மரண தண்டனை வழங்க வேண்டும். நாட்டுக்குப் பொதுவான சட்டம் கொண்டுவரப்பட வேண்டும். நாட்டின் அரச பணியாளர்கள், அரசியல்வாதிகளின் சொத்து விவரங்களைத் தேடவேண்டும். அவ்வாறு அவர்கள் ஊழல், மோசடிகளில் ஈடுபட்டிருந்தால், அவர்களுக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும். அத்துடன், இதனை நாடாளுமன்றம் ஊடாகச் சட்டமாகவும் கொண்டுவர வேண்டும்.

> **“ எனது தேர்தல் பிரசாரத்தில், அவரையும் இணைத்துள்ளேன். அவருடைய புகைப்படத்தையும் என்னுடைய புகைப்படத்தையும் இணைத்தே தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறோம். நாட்டில் பொருத்தமற்ற ஓர் அரசியல் பயணத்தை நாம் முன்னெடுத்து வருகிறோம்**

அதுமட்டுமல்லாது, ஊழல், மோசடிகள், கொள்ளைகளுக்கு உதவும் நபர்களுக்கும் மரண தண்டனை வழங்க வேண்டும். நாட்டின் சகல பிரதேசங்களிலும், அந்தந்தப் பிரதேசங்களுக்குப் பொருத்தமான உற்பத்திச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இறக்குமதி செய்யப்படும் உணவுப் பொருள்களைப் பிள்ளைகளுக்கு வழங்காது, உள்நாட்டு உற்பத்தி மூலம் பெறப்படும் உணவுகளைப் பிள்ளைகளுக்கு வழங்கி, போஷாக்கான ஆரோக்கியமான பிள்ளைகளை உருவாக்க வேண்டும். இதன்மூலம், தேசிய உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்புண்டு. எனவே, இதற்கு முதன்மையளிக்க வேண்டும்.

நாட்டில் அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய கலாசார முறை அவசியம். இன, மத வேறுபாடுகள் இன்றி, அனைத்தின மக்களும் ஒன்றுமையாகவும் சுதந்திரமாகவும் வாழக்கூடிய சமூகச் சூழலை ஏற்படுத்த வேண்டும். மக்களுக்குப் பொதுவான வீடமைப்பு முறை அவசியம். சமத்துவத்துடன் வாழும் நிலை ஏற்படுத்தப்பட வேண்டும்.

**கே: ஐக்கிய தேசிய கட்சி, தற்போது எவ்வாறான நெருக்கடியை எதிர்நோக்கியுள்ளது?**

ஐக்கிய தேசிய கட்சி, எவ்வித நெருக்கடியையும் எதிர்கொள்ளவில்லை. அக்கட்சிக்குள் எந்தவொரு நெருக்கடியும் இல்லை. இதிலிருந்து வெளியேறியோருக்கே நெருக்கடி ஏற்பட்டுள்ளது. அவர்கள், முன்னர் இருந்த இடத்தின் பெயர்ப் பலகையை ஞாபகத்தில் வைத்துள்ளனர். சிறிகொத்த குறித்துக் கனவு காண்கிறார்கள். ஐக்கிய தேசிய கட்சி, திடமாக உள்ளது. ஆனால், ஏனைய கட்சிகளுடன் டீல் மேற்கொண்டவர்கள் சஜித் பக்கம் ஓடினார்கள்.

**கே: ஐ.தே.க பிளவடைந்தமைக்கான காரணம் என்ன?**

தகுதியானவருக்கு தகதியான இடத்தை வழங்காமையே இதற்குக் காரணம். அதாவது, பிரதித் தலைவர் பதவிக்கு சஜித் பிரேமதாஸ பொருத்தமற்றவர். அவரது தந்தை ரணசிங்க பிரேமதாஸ குறித்துச் சிந்தித்தே, கட்சியில் அவருக்குப் பிரதித் தலைவர் பதவி வழங்கப்பட்டது. கட்சியின் நெருக்கடி நிலைக்கு பிரதான காரணகர்த்தா, புத்திசுயாதீனமற்ற சஜித் பிரேமதாஸ மாத்திரமே.

**கே: ஐக்கிய மக்கள் சக்தியைவிட, ஐக்கிய தேசிய கட்சி அதிகளவு ஆசனங்களைக் கைப்பற்றுமா?**

இந்தத் தெரிவு மக்களிடமே உள்ளது. கடந்த காலத்தில், பொருளாதார ரீதியில் மக்கள் நெருக்கடிகளை எதிர்நோக்கவில்லை. மக்கள் வாழ்வதற்கான சூழல் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டது. இன்று, நாட்டின் பிரச்சினைகளை மறந்து, தேர்தல் பிரச்சினைகளைக் கையில் எடுத்துச் செயற்படுகின்றனர். நாட்டுப் பிரஜைகளே மக்களுக்குச் சேவையாற்றக்கூடிய பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டும்.

**கே: ஐ.தே.கவின் வெற்றியை நீங்கள் உறுதிசெய்கிறீர்களா?**

ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் மதிநுட்பத்தை, நாட்டு மக்கள் அறிவார்கள். ஐக்கிய தேசிய கட்சியின் வெற்றிக்கான வியூகங்களை, அவர் வகுத்து வருகிறார். தேர்தல் காலத்திலேயே அரசியல்வாதிகள் மக்களைத் தேடுவார்கள். இவ்வாறு அரசியல்வாதிகள் மக்களை மறக்காதிருப்பது போல, வாக்காளர்களும் அரசியல்வாதிகளை மறக்காதிருக்கக்கூடிய நடைமுறை ஏற்படுத்தப்பட வேண்டும்.

**கே: கட்சியின் எதிர்காலம் பற்றிய உங்களது நிலைப்பாடு என்ன?**

ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்காலம், மிகவும் நல்லதாகவே அமையும். ஏனெனின், பாரிய வெள்ளத்தில், மோசடியாளர்கள், திருடர்கள், பொய்க்காரர்கள், ஊழல்வாதிகள் அனைவரும் அடித்துச் செல்லப்பட்டுள்ளனர். தற்போது, மக்களுக்குப் பணியாற்றக் கூடிய சிறந்த தலைவர்களே சிறிகொத்தவில் உள்ளனர். எனவே, கட்சியின் எதிர்காலம் குறித்துக் கவலைப்படத் தேவையில்லை. ஐக்கிய தேசிய கட்சியின் எதிர்காலம், வளமாகவே அமையும்.

**கே: ஐ.தே.கவின் தலைமைத்துவத்தில் மாற்றம் அவசியம் என்று பலர் கூறிவருகின்றனர். அதில் நீங்கள் மாற்றுக் கருத்தை முன்வைக்கிறீர்களா?**

இல்லை. ஆனால், அவரைவிட அரசியல் அனுபவம், நிபுணத்துவம் உடைய இளைய தலைமுறை ஒன்று உருவாகினால், அவர்களுக்குக் கட்டாயம் தலைமைத்துவத்தை வழங்க வேண்டும். ஆனால், சஜித் போன்ற புத்திசுயாதீனம் அற்றவர்களுக்குத் தலைமைத்துவத்தை வழங்க முடியாது.

**கே: ஐக்கிய தேசிய கட்சி, அரசாங்கத்துடன் டீல் வைத்துள்ளதாகக் கூறப்படுகிறதே உண்மையா?**

டீல் அரசியல் ஐக்கிய தேசிய கட்சியிடம் இருப்பதாக இருந்தால், தேர்தலில் போட்டியிட வேண்டிய அவசியம் இல்லை. உண்மையில், ஐக்கிய மக்கள் சக்தியே டீல் அரசியல் மேற்கொள்கிறது. அடுத்த பிரமதர் சஜித் என்றும் ஜனாதிபதி கோட்டா என்றும் கூறுகின்றனர்.

அவர்களிடம் டீல் இருப்பதாலேயே இவ்வாறு கூறி வருகின்றனர். நாங்கள் அவ்வாறு எதையும் கூறவில்லை. ஆனால், நாங்கள் பிரதமர் பதவியைப் பெற்று, பின்னர் ஜனாதிபதிப் பதவியை பெறவே எதிர்பார்க்கிறோம். ரணில் விக்கிரமசிங்க என்பவர், நாட்டில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாகப் பதவியில் அமர வேண்டிய ஒருவர்.

**கே: தற்போதைய சூழ்நிலையில், நீங்கள் மக்களுக்குக் கூற நினைப்பது என்ன?**

மக்களையும் நாட்டையும் நேசிக்கும் தலைவர்களையே மக்கள் தெரிவுசெய்ய வேண்டும். மக்கள் இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். தற்போதைய கொரோனா காலத்தில், மக்களுக்குக் கைகொடுத்தவர்கள் யார் என்பதை மக்கள் அறிந்து, தங்களது வாக்குரிமையைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.

**கே: உங்கள் மீது அரசியல் பழிவாங்கல் தொடர்வதாகக் கூறினீர்கள். அதற்கான காரணம் என்ன?**

நிமிர்ந்து நின்று அரசியல் செயற்பாடுகளை முன்னெடுப்பதும் ஏனைய அரசியல்வாதிகளால் செய்ய முடியாமல் போனவற்றைச் செய்ததுமே இதற்குப் பிரதான காரணம். கொரோனா, வெள்ளப்பெருக்கு, மண்சரிவு போன்ற அனர்த்தங்களின் போது மக்களுக்கு உதவ முடியாமல் போனவர்கள், மக்களுக்குக் களத்தில் இறங்கிச் சேவையாற்றிய என்னை விமர்சிக்கிறார்கள். அரசியல் பழிவாங்கல்களில் ஈடுபடுகிறார்கள். இவ்வாறான அரசியல்வாதிகள், பொலிஸ் திணைக்களத்தின் ஊடாகப் பழிவாங்கல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

**கே: உங்களது அரசியல் எதிர்காலம் பற்றிக் கூறுவீர்களா?**

எனது அரசியல் எதிர்காலத்தை நான் தெரிவுசெய்ய முடியாது. இதனை மக்களே தெரிவுசெய்ய வேண்டும். என்னை நாடாளுமன்றத்துக்கு அனுப்புவதற்கான தீர்மானம், மக்களின் கைகளிலேயே உள்ளது.

**கே: மக்களுக்காக நீங்கள் எவ்வாறான வேலைத்திட்டங்களை எதிர்காலத்தில் முன்னெடுக்க எண்ணியுள்ளீர்கள்?**

மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை இனங்கண்டு, அவற்றுக்குத் தீர்வு வழங்குதல், மக்களுக்கான முறையான அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தல் போன்றவற்றை முன்னெடுப்பேன்.

**கே: களுத்துறை மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ன, குறிப்பாகச் சிறுபான்மை மக்கள் எவ்வாறான பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகிறார்கள்?**

முக்கியமான பிரச்சினைதான் அவர்களது பசிக்கு யாரும் சரியான மருந்தை வழங்கவில்லை என்பது. இங்குள்ள மக்களுக்கு வீடமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும். பிள்ளைகள் கல்வி கற்கச் சிறந்த பாடசாலைகள் அமைக்கப்பட வேண்டும்.

> **“ மக்களுக்கான காணி உரிமையை வழங்க வேண்டும். அவ்வாறு ஏற்படின், அவர்களின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படும். இல்லாவிட்டால், அவர்கள் கள்ளத் தோணிகளாகவே வாழ்வார்கள்**

கல்வி கற்றோருக்குச் சிறந்த தொழில் வாய்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

**கே: நீங்கள், தமிழ், முஸ்லிம் மக்களை நேசிக்கும் தலைவராக இருக்கிறீர்கள். ஆனால், கடந்த 26 வருடங்களாகக் களுத்துறை மாவட்டத்தில் தமிழ்ப் பிரதிநித்துவம் இல்லை. அதற்கான காரணம் என்ன, களுத்துறை மாவட்டத்துக்குத் தமிழ் பிரதிநிதித்துவம்அவசியம் என்பதை நீங்கள் வலியுறுத்த விரும்புகிறீர்களா?**

நாட்டில் சகல இனத்தவர்களும் ஓர் இனமாக வாழ வேண்டும். அவ்வாறாயின், இந்தப் பிரச்சினைக்கு இதன்மூலம் தீர்வு கிடைக்கும். இதுவரை, சிறுபான்மை மக்கள் தலைமைகளாக இருந்துச் செயற்பட்ட திகாம்பரம், மனோ கணேசன், தொண்டமான் போன்றவர்கள், ஏனையோருக்கு இடமளிக்கவில்லை. தங்களுக்குத் தேவையானதை அரசாங்கத்திடம் பெற்றுக்கொண்டார்களே தவிர, மக்களுக்குத் தேவையானதை அவர்கள் பெற்றுக்கொடுக்கவில்லை. மலையக மக்கள், இன்னும் 8 அடி லயன் அறைகளிலேயே வாழ்கின்றனர். அவர்கள், குறைந்தபட்சம் காணி உரித்தைக்கூட அம்மக்களுக்குப் பெற்றுக்கொடுக்கவில்லை. குறுகிய வேலைத்திட்டங்களையே அவர்கள் முன்னெடுத்துள்ளனர். மக்களின் பொதுவான பிரச்சினைகளுக்கு அவர்கள் தீர்வு வழங்கவில்லை. தமிழ், முஸ்லிம் மக்களின் பிரச்சினைகளை, அவர்கள் பிரதிநிதிகள் ஆட்சியில் இருந்தும் செய்ய தவறியுள்ளனர்.

**கே: இம்முறை ஐக்கிய தேசிய கட்சியில் களுத்துறை மாவட்டத்தில் போட்டியிடும் வேட்பாளர் சண். பிரபாவின் வெற்றிக்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவீர்களா?**

நிச்சயமாக ஒத்துழைப்பை வழங்குவேன். எனது தேர்தல் பிரசாரத்தில், அவரையும் இணைத்துள்ளேன். அவருடைய புகைப்படத்தையும் என்னுடைய புகைப்படத்தையும் இணைத்தே தேர்தல் பிரசாரத்தை முன்னெடுத்து வருகிறோம். நாட்டில் பொருத்தமற்ற ஓர் அரசியல் பயணத்தை நாம் முன்னெடுத்து வருகிறோம். அதாவது, நல்லிணக்கப் பாதையில் பயணிக்கிறோம். தோட்டப்பகுதி மக்களின் 28,000 வாக்குகளே உள்ளன. இதில் 15,000 பேரே வாக்களிப்பார்கள். அவர்களிலும், 7,000 பேர் மாத்திரமே சரியாக வாக்களிப்பார்கள்.

**கே: அரசியல் ஊடாகச் சிறுபான்மை மக்களின் அபிலாஷைகள் நிறைவேற்றப்படுமா?**

மக்களுக்கான காணி உரிமையை வழங்க வேண்டும். அவ்வாறு ஏற்படின், அவர்களின் அடிப்படைப் பிரச்சினை தீர்க்கப்படும். இல்லாவிட்டால், அவர்கள் கள்ளத் தோணிகளாகவே வாழ்வார்கள். அவர்களுக்கு வாழ்வதற்கான காணி உரிமை கட்டாயம் பெற்றுக்கொடுக்கப்பட வேண்டும்.

**கே: சிறுபான்மை மக்களின் மனங்களை வென்ற தலைவராக நீங்கள் பார்க்கப்படுகிறீர்கள். அது எவ்வாறு சாத்தியமானது, தொடர்ந்து சிறுபான்மை மக்களுக்காகக் குரல் கொடுப்பீர்களா?**

ஆம். சமூகச் சேவைகள் ஊடாக மக்கள் மத்தியில் இடம்பிடிக்க முடிந்துள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 14 ஜூலை 2020, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.